www.tamilarangam.net

SARVADESA TAMIL

# சர்வதேசதமிழர்

Redaktør: N.S.Pirabu, B.Sc., Dip.Jour(U.K.)   Etbl.1994

Norges Tamilskblad for informasjon, kunnskap, kultur og solidaritet   1998   Vol.5 Nr.6




ந்தா,விஜயேந்திரன்,கங்காதரன்,சிவதாஸ்,செல்வராசன்



நோபல்குழு தலைவருடன்



பாரிஸ்-ஈழநாடு-கந்தசாமி



சாமிமன்றதலைவர்

**all different**
**all equal**




ஜேர்மன்,பிறேமெனில்



எழுத்தாளர் மெர்வின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ: தி.கிருபா, கு.பாலதாஸ் பாலேந்திரா பேர்கன்: என்.ஜெயதரன்,ம.மகான் ,சிவகாந்தன் துறொண்கைம்: தர்மா ஸ்ரவங்கர்: அ.பாஸ்கரன்; முபாரக் அலி கிறிஸ்ரியன்சான்ட்: ம.பஸ்ரியன் ஏகசுண்ட்: பொன்.சிவா; துறம்சோ: கே.சிவராஜா; வார்டோ: குகனெறியப்பன்; பேர்லவோக்:ஐ.ரி.ரவீந்திரன் போட்ஸ்பியுட்:க.சுரேஷ்கரன் பிறத்வோக்: குமார் கிறி.சுண்ட்:தேவராஜா

# சர்வதேச தமிழர் சந்திப்புகளம்:

**அன்பு ஆசிரியநண்ப,**

சர்வதேசதமிழர் இதழ்கள் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியும்,நன்றியும் என்றென்றும் உண்டு!
தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதி சஞ்சிகையைச் சிறப்பாகத்தயாரித்து வெளியிட்டுவருவது வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியதாகும். பன்னாட்டுத்தமிழர் பலருக்கும் அன்பளிப்பாகவே இதழ்களை அனுப்பிவருவது, தங்கள் ஆர்வத்தையும்,இலட்சிய நோக்கையும், தாராள மனசையும் வெளிப்படுத்துகிறது.
சர்வதேசதமிழர் எங்கும் பரவி,பலராலும் வரவேற்கப்படுவது அறிந்து மகிழ்கிறேன்.
1996ல்,தாங்கள் என்னை கொழும்பில்நடந்த,இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க இலக்கியப் பேரரங்கில் சந்தித்துப் பேசியதை நான் நினைவுகொள்கிறேன்.
தங்கள் தமிழார்வம், தமிழ்இனப்பற்று,தாய்மண்ணுக்காகப் பாடுபடும் உயர்பண்பைப் போற்றுகிறேன். தங்கள் உயர்பணிகள் சிறப்புற வளர்ந்து வெற்றி பெற வாழ்த்துகிறேன்!
இதழ்-3ல் இலங்கைவாழ் தமிழர் சிரமங்கள்,கொழும்பு நகரில் தமிழர் அனுபவிக்கநேரும் கொடுமைகள், யாழ்ப்பாணம் செல்பவர்கள் படும் இன்னல்களை நன்கு அறிய முடிகிறது.
தாய்லாந்து போன்ற வெளியிடங்களில், சிலதமிழர்கள் சகதமிழர்கட்கு செய்யும் ஏமாற்றுவேலைகள்,சுரண்டல்கள் பற்றி அறிய மன வருத்தம் ஏற்படுகிறது.
இதழ் 4ல் யாழ்.முதல்வர் படுகொலை குறித்த ஆசிரியர் கருத்து நேர்மையானது! நியாயமானது!!
கொழும்பிலிருந்து யாழ்.வரை பயணம்செய்த, நோர்வே தமிழரின் அனுபவம்,வேதனை தருவது!
இன்றைய யாழ்.மக்களின் வாழ்க்கை நிலையை நன்கு எடுத்துசொல்வது!
டாக்டர்.லோகாம்பாளின் -பழந்தமிழர் கம்போடியாவில்- கட்டுரை பல முக்கிய வரலாற்றுத் தகவல்களைத் தெரிவிக்கிறது.கனடா கனகேசின் -இலங்கைப்பெற்றோரும் கனடாக்குழந்தைகளும்!-தற்கால,தீவிரப்பிரச்சனை பற்றிய ஆழ்ந்தசிந்தனையை வெளிப்படுத்துகிறது!
அதேபோல் -தமிழர்தகவல்- ஆசிரியர் கருத்தும் முக்கிய ஆலோசனைகளைக் கூறுகிறது!
கவியரங்கு கவிதைகள் நன்றாகவேயுள்ளன.
கனடா-கனகேசின் வாலறுந்தபட்டங்கள்,டென்மார்க்-வேலணையூர் பொன்னண்ணாவின் எங்குதான் செல்வாய் இனி? உள்ளத்தைத் தொடுபவை!
விசேடமாக குறிப்பிடத்தக்கவை!
தமிழகத்திலும் கோடைவெயில் மிகக்கடுமையாக, உக்கிரமாக,வறுத்துஎடுத்துவிட்டது. 104 -112.பாகை, பரனைட் என வெயில் வாட்டியது. சமீபகாலங்களில் இப்படி அதிக வெயில் எரித்ததில்லை.நோர்வேயில் மனோகரமான காலநிலை கோடையில் நிலவும்!என நம்புகிறேன்! **-எழுத்தாளர் வல்லிக்கண்ணன்**
10,Vallalar Flats,New st,Lloyds rd,Chennai-600 005

**பெருமைக்கும்,அன்புக்குமுரிய நண்பரே!**

சர்வதேச தமிழர் கிடைத்து, நானும் நண்பர்களும் பகிர்ந்து அதிலுள்ள பாசத்தையும்,பிணைப்பையும் எங்கிருந்தாலும் தமிழன் வாழ்க! என்ற பெருமிதத்துடன் அதிலுள்ள விடுதலை வேள்வினைப் பகிர்மானம்,செய்தோம்.மகாகவி பாரதி இலக்கியப்பேரவை சார்பில் பாசத்துடன் உறவுமுறையை பகிர்மானம் செய்வோம். எமது பேரவையின் சார்பில் -கவிதாதேவி- எனும் இதழும் நடாத்திவருகிறோம்.அதனை சர்வதேசதமிழருடன் மாற்றீடு செய்யவிரும்புகிறோம்.இத்துடன் கவிதாதேவி இதழ்களும் அனுப்புகின்றோம்.வாழ்க! வளர்க!!
**கவியருவி மு.அருணாசலம்-தலைவர், இராதா கிருஷ்ணன்-செயலர்,மகாகவி பாரதி இலக்கியப் பேரவை,நெடுஞ்சாலை,வத்தலகுண்டு-624 202 திண்டுக்கல்,அண்ணா மாவட்டம்,இந்தியா**

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு!**

நோர்வேபத்திரிகையாளர் சங்கமும்,நோர்வேபத்திரிகை கல்வி நிறுவனமும் தங்கட்கு பத்திரிகைஆசிரியருக்கான விருதுவழங்கிய செய்தி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம்.
இலாபநோக்கின்றி உலகத்தமிழர் நலன்,ஒற்றுமை ஆகியவற்றை மட்டும் இலட்சியமாகக் கொண்டு 1994முதல் வெற்றிகரமாக நடாத்திவரும் தங்களுக்கு நோர்வே விருது கிடைத்தமை முற்றிலும் சரியே!
வெற்றிப்பாதையில்தொடர்ந்து,தங்கள் இலட்சியப் பயணம் தொய்வின்றி நடக்க அன்புடன் வாழ்த்துகிறோம்.
கொழும்பிலிருந்து யாழ்.வரை....நோர்வே தமிழரின் அனுபவம்,உலகில் எந்த ஒரு நாட்டிலும் இந்த அளவுக்கு இனவெறி மோசமாக தலைவிரித்து ஆடவில்லை!என்பதையேகாட்டுகிறது.அந்த அளவுக்கு சிங்களவர்கள் இனவெறி பிடித்து ஆடுகிறார்கள்.
மனிதநேயம்,என்னவென்றே தெரியாத இனவெறிபிடித்த மிருகங்களுடன் தமிழர்கள் எப்படி ஒன்றாக வாழமுடியும்?சொந்தநாட்டில்,சொந்தகுடிமக்களை அடிமைகளாயும்,சந்தேகமாயும் நோக்கும்,அடக்குமுறை,வன்முறை நடாத்திடும் மூடர்களுடன் தமிழர்கள் ஒன்றிணைந்து வாழ்க்கை நடாத்துவது என்பது,நடைமுறைக்கு சரிவராத ஒன்று! தமிழர்கள் ஈழத்தில் ஏன் தனி நாடு கேட்கிறார்கள்? என விபரம்தெரியாத சிலர் கேட்கிறார்கள். ஆனால் இந்த அனுபவக் கட்டுரையை படிப்பவர்கள் அப்படிக்கேட்கமாட்டார்கள். சிங்களவர் தமிழர்களை மனிதர்களாக மதிக்காவிடில், உலகம் அவர்களை ஒருபோதும் மதிக்காது. புத்தர் உலக அமைதியைத் தான் விரும்பினார். தமிழர்களை விரோதிகளாக கருதுவதை விடுத்து நண்பர்களாக என்று கருதுகிறீர்களோ,அன்று தான் உலகம் உங்களை மதிக்கும். கொழும்பு வரும் தமிழர்களை கொடுமைப்படுத்தும் போக்கினைக் கைவிடுக!
தமிழர்களும் தனித்தனிக் குழுக்களாக பிரிந்து வாழ்வதை விடுத்து எல்லோரும் ஓரணியில் திகழ முயலவேண்டும்!
உலகத் தமிழர்கள் அனைவரும் விரும்புவது, ஈழத்தமிழர்களின் இன்பமயமான,அமைதியான வாழ்க்கையைத் தான்!
சர்வதேசதமிழரின் அபிமானம் பெற்ற திரைக்கலைஞர் பிரசாந்தின் ஜீன்ஸ்பட போட்டோவும் வெளியிட்டு அவரைக் கௌரவப்படுத்தியமைக்கு பாராட்டுக்கள்!
**இரா.இரவி,சுற்றுலாத்துறை,திருமலை மன்னர் அரண்மனை,மதுரை1,தமிழ்நாடு.தொ.பே625945**

**அன்புடன் ஆசிரியருக்கு,**

கனிந்த இனியகைகூப்பு! சர்வதேச தமிழர் இதழ் 4ல் ஆசிரியரின் கருத்து மிகஅருமை,சிந்திக்கத் தக்கது!
ஈழத்தமிழர் அவலம் ஆழ்ந்துசிந்திக்க வேண்டிய பிரச்சனை!கண்ணைவிற்றுச் சித்திரம் வாங்கிய கதையாகி விடக்கூடாது.கொழும்பிலிருந்து யாழ்.வரை..அனுபவம் கொடுமை! பிறந்துதவழ்ந்த சொந்தமண்ணில்,அடிமையாக,வாயிருந்தும் ஊமையாக,நாளை என்பதே கேள்வியாக,உயிரையும்,மானத்தையும் கையில்பிடித்துக் கொண்டு விநாடிதோறும் செத்துவாழும் தமிழர்களின் நிலைகண்டு மனம் சொல்லவொணாதபடி கனக்கிறது.
தமிழர் தம் சொந்தநாட்டில் அகதியாக வாழ்வது கொடுமை!நெஞ்சுபொறுக்குதில்லையே!சொந்த சகோதரர்கள் துன்பத்தில் வாடல்கண்டு! பழந்தமிழர் கம்போடியாவில்...!கட்டுரை சிந்திக்க வைத்தது.பயனுள்ள விடயங்கள்!கவியரங்கில் எல்லாம் சுவை! திலீபன், தமிழ்மறவன்,கனகேஸ் கவிதைகள் சிறப்பு!வாலறுந்த பட்டங்கள் நம்மவர்கட்கும் பொருந்தும்காலம் அதிக தூரத்தில் இல்லை.இன்றைய பெண்களின் போக்கு இதனை நமக்கு காட்டுவது மனவருத்தம் தருவது!
மேற்கத்தவர்,இந்தியமுறைநோக்க,நாம்அவர் வழிக்கா?
**எஸ்.கிருஷ்ணன்,சிங்கப்பூர்.தொ.பே.:657553613**

கோப்ன: புருசோத்தமராஜன் பாரும்: மு.கணேசராஜா ,சுந்தரலிங்கம் அஸ்கர்: சிவராஜா நேதனஸ்:எலிஸ்ரன் நூர்பியுறெய்ட்: சுமதி
ட்றம்மன்: மு.மணிவண்ணன் ரொன்ஸ்பேக்: சி.மணி ஸ்திறின்:சர்வேந்திரன் புஸ்பா ,பிறை: தெ.வீரகத்தி அல்தா: பி.மகேஸ்வரன்
பாட்ன்ஸ்பியுறோறா:ரவீந்திராதேவி ஸ்கொட்ஜ:கி.கலாநிதி ஒலகண்ட்:திரு.பொன்னுதுரை பிறட்றிக்ஸ்ராட்: பென்சமின் ராஜா பிலிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்கோறா்: சிவராஜா கல்வோக்: கனகசிங்கம் ,கூல்: கஜேந்திரன் ,சூர்வார்:மனோகரன்,பகீரதன் ,ஒஸ்: கிருபா ,கூல்:யோகராஜா
பிரிட்டன்:சோ.கனககந்தரம், ராஜி சந்திரன்,டாக்டர்.செ.ஆனந்தவரதன்;ந.பாலமுரளி,தவமணி.மனோகரன்.ஆறுமுகம் ,செ.நாகேந்திரன்
கனடா: கனகேஸ்வரி நடராஜா, எஸ்.திரு, ம.மகிந்தன்;நியுசிலாந்த்:தி.திருநந்தகுமார்,சு.பாஸ்கரன்,பின்லாந்த்: இ.சிவலிங்கம் வி.சிவரூபன்
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி,வல்லிக்கண்ணன், தி.பிரசாந்த்; மைசூர்: குபுகமேந்தி பழனி: டாக்டர் இளங்கம்பன்

# சர்வதேசதமிழர்-1998

## ஆசிரியர் கருத்து:தொ.5, இல.6

## தமிழர்களும் நோர்வேயும்!

தமிழர்கட்கும்,நோர்வேக்குமிடையிலான தொடர்பு 1960க்குப்பின் இலங்கையின் வடபகுதியில் காரைநகர் சீநோர் கண்ணாடியிழை-படகுதயாரிப்புத்திட்டத்தால் ஆரம்பிக்கப்பட்டு,பின்பு நோர்வே மொழி கற்று,மேற்படிப்பு பயல என வந்த தமிழ்மாணவர்களால் பலப்படுத்தப்பட்டு,1986க்குப்பின்,அரசியல்புகலிடம் கோரிவந்த அகதிகளாலும், அவர்களது குடும்பஇணைவுகளாலும், கல்வி பயில வந்தவர்கள் நாட்டுநிலைமை காரணமாக தஞ்சம்கோரி இங்கேயே நிரந்தரவதிவுரிமை பெற்றதாலும் இறுக்கமடைந்தது.இன்று சுமார் 12000 தமிழர்களில்,குழந்தைகள்-முதியோர் தவிர சுமார் 8000 தமிழர்கள் உழைப்பாளிகளாக சராசரி 50000-குரோணர் வருடாந்த வரிசெலுத்துகிறார்கள்,எனக்கருதினால் நோர்வேக்கு தமிழர்களால் 400மிலியன் வருடவருமானம் உண்டு! எனக்கருதலாம். குடியேறியசகலரிலும் தமிழர்களே மிகக்குறைவான, வேலையின்மை வீதமுள்ளவர்களாவர்.
1943ல் இரண்டாம் உலகமகாயுத்தத்தில் 3நோர்வேஜியர்களும்,22 ஹொங்கொங் சீனர்களும் வந்த கப்பல் யப்பானியர்களால் குண்டுவீசப்பட்டு திருகோணமலைக்கு அருகில் மூழ்கடிக்கப்பட்டதும்,தப்பி நீந்திய அவர்களை தமிழர்கள் கரைசேர்த்து,உணவு,உடை,புகலிடம் தந்து தமிழ்பாதிரியார் உதவியால் கொழும்பு மூலம் தத்தம் நாட்டுக்கு அனுப்பி உதவிய வரலாறு பழையதொடர்பைகாட்டுகிறது

தமிழர்களின் கடினஉழைப்பு,திறமை, வேலைவிசுவாசம்,பொறுப்புணர்வு,நேரந்தவறாமை,தேவையற்றவிடுமுறை எடாமை,எந்த இனத்தவருடனும் இலகுவில் நடபுறவும்-சமத்துவமும் பேணும் தன்மை,நீதிமறுக்கப்படின் போர்க்குணம்,விடயங்களை இலகுவில் பிடிக்கும்தன்மை,வரவேற்பு,விருந்தோம்பல்,பரதநாட்டியம்,இசை,விளையாட்டுதிறமை என்பன நோர்வேஜியர்களிடம் தமிழர் ஒருமுன்னேற்றகரமான,உழைப்பான இனம்!என அடிக்கடி பத்திரிகைகளில் பாராட்டுமளவுக்கு வளர்ந்துள்ளது.
அண்மையில் யாழ்ப்பாணம் சென்ற ஒரு நோர்வேஜியர் அங்குள்ள சிறிதும்,பெரிதுமான தனிவீடுகள், தனிக்கிணறுகள்,வேலிகள்-மதில்கள்,தோட்டங்கள் வீடுகட்கு முன்னுள்ள பூந்தோட்டங்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையிலும்,அருமையான,ஒழுங்கமைப்பான சமுதாயமாக,இயங்கிவந்த தன்மையையும் நம்பிக்கையையும் பாராட்டினாராம்.இது தமிழர்க்கு பெருமையே தான்!
தற்போது நீதிஅமைச்சில் பணிபுரியும் நோர்வேஜியரான ஒய்வின் புகுலருட், தமிழர்பற்றி ஆய்வுசெய்து கலாநிதிப் பட்டம்,பெற்றதும்,உடனடியாக,குடியேறியோர் திணைக்களம்அவரை அதிகாரியாக நியமித்தமை குறிப்பிடத்தக்கது.
இலங்கைப்பிரச்சனையிலும் நடுநிலையாக சமரசதொடர்பாளராகவும் பணிபுரிய நோர்வே விருப்பம் தெரிவித்தும் சந்திரிகா அரசின் அறியாமையால் அது தடையாகவே உள்ளது,கவலை!

தமிழரும் தம் போட்டி-பொறாமையால் சண்டை,சிலரது உலுத்தத்தனமான தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளால் அவப்பெயர், தொழிலகங்களில்-வாகனஓட்டங்களில் பாதுகாப்புவழிகளை கையாளாமையால் தேவையற்ற விபத்துகளும் உயிரிழப்புகளும், நட்புகள்-கொடுக்கல்வாங்கல்கள்-குடும்பச் சண்டைகள் எல்லைமீறி பிரச்சனைகள் வெடித்தல்- பிரிவுகள்- மோதல்கள், காசே தான் கடவுளடா!எனும் பேராசைப்போக்கு,மதுவுக்கு அடிமையாதல், மனைவி-பிள்ளைகளுடன் அதிகநேரம் செலவிடாமை,அத்துடன் மொழி படிக்காததால் தவறான விளங்கல்களும்-தேவையற்ற முரண்பாடுகளும், ஊர்வாதம்,இயக்கவாதம்,குழுவாதம் புதிய சமூகத்தில் பிள்ளைகளின் கலாசார விழுமியமுரண்பாடுகளும்-பெற்றோருடன் மோதல்களும் என பலபிரச்சனைகளும் தமிழர்களை விட்ட பாடில்லை.
நோர்வேஜியர்களுடன்நட்புறவு,சமத்துவம்,சமாதானம்,எம்முள் அமைதி,ஐக்கியம்,முன்னேற்றம்,சமநிலை அவசியம்!!

சேலம்:இராசமாணிக்கம்திருச்சி: சிங்காரவேலன்,ஜான்ராஜ்தேவர் மதுரை: இரா. இரவி:சு.இலக்குமணசுவாமி புதுச்சேரி:ச.வேல்முருகன்
கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:சுந்தரேசன்,ரவிராமானுசம், பாலாஜி கேரளா:சிவமணி ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள்
சுந்தரம், செல்வகிருஷ்ணன் கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்; பெங்களூர்: பேராசிரியர் சி.இராமமூர்த்தி, ஆ.சி.விசுவநாதன்,

www.tamilarangam.net

க.கு.கருப்பையா புதுக்கோட்டை: எஸ்.விஜயகுமார் செய்யாறு: விபாலு வேலூர்: சாம் டேவிட் கோவை: பூ.வே.தமிழன்பன்
ரஷ்யா/மாஸ்கோ: முருகேசம்பிள்ளை ,ஆர்.சுகுமார் சவுதிஅராபியா / அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன் ;ஜித்தா:
எஸ்.காளிதாஸ் துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்,கணேசலிங்கம்

## கேட்டீர்களா சேதி:

1.கோவிலூர் செல்வராசனின் புதுக்கோலங்கள் மெல்லிசைப்பாடல்கள் தொகுப்பு,ஒஸ்லோ தொய்யன் தேவாலயத்தில் 20.9.98 மாலை வெளியிட்டு வைக்கப்பட்டது. காசி ஆனந்தனின் அழகான முன்னுரையுடன் சென்னையில் அச்சிடப்பட்ட இந்நூலின்,விழாவில் நோர்வே தமிழ் இணைவுகூட தலைவர் கங்காதரன்,அன்னைபூபதி கலைக்கூட அதிபர் சிவதாஸ்,கார்மேகம் நந்தா,இளவாலை-விஜயேந்திரன்,வ.ஐ.ச.ஜெயபாலன்,பொன்.சுபாஸ்சந்திரன்,சுந்தரமூர்த்தி ஆகியோர் உரைநிகழ்த்தினர். கவிஞர் தி.திலீபன் நூலை வெளியிட சர்வதேசதமிழர் ஆசிரியர் பிரபு முதல்பிரதியைப்பெற்று கௌரவித்தார்.கோவிலூர் அனைவருக்கும் நன்றிகூறினார். பல ஒஸ்லோதமிழர்கள் கலந்துகொண்டு இனிய இலக்கியபொழுதை கலகலப்பாக்கினர்.

2.நோர்வே-நீதிஅமைச்சால் அமைக்கப்பட்ட பேச்சு-கருத்துசுதந்திரகமிசனின்-சிறுபான்மையரும் பேச்சு-கருத்து சுதந்திரவாய்ப்புகளும்-எனும் தலைப்பில் ஒஸ்லோ நோபல் நிலையத்தில் 10.9.98ல் நடந்த,பகிரங்ககருத்தரங்கில் சிறுபான்மையர் பற்றி நோர்வே தகவல்ஊடகங்களின் பங்கு,சிறுபான்மையர் அமைப்பாக்கம்,சிறுபான்மையர் தகவல்ஊடகங்கள், அரசதகவல்ஊடகங்களும்-சிறுபான்மையரும் எனும்தலைப்புகளில் கருத்துரைகள் வழங்கப்பட்டன. தமிழ்முரசம் வானொலி சார்பில் திரு.ராஜன் செல்லையாவும்,சர்வதேசதமிழர் சார்பில் ஆசிரியரும் தம் கருத்துகளை முன்வைத்தனர். கண்டங்கள்,நாடுகள்,இனங்களிடையே நீதியும்,அமைதியும் பேணப்பட்டால் தான் உலகில் உண்மையான சுதந்திரம் அனைவர்க்கும் கிட்டும்!நோர்வே அதற்காக ஓயாது பாடுபடவேண்டும்!எனும் கருத்தை வலியுறுத்திய,ஆசிரியர்,நோர்வேயில் நோர்வே சிறுபான்மையர்கட்சி குடியேறியோர்களால் அமைக்கப்படலின் அவசியத்தையும், நோர்வே அரசின் சார்பில் சுவீடனிலுள்ளது போல் சிறுபான்மையர் அமைச்சு ஆரம்பிக்கப்பட வேண்டியஅவசியத்தையும் வலியுறுத்தி இவை தேசியமட்டத்தில் சிறுபான்மையர் சுதந்திரவாய்ப்பை துாரநோக்கில் அதிகரிக்கும்!எனவும் எடுத்துக்கூறினார். கமிசனின் தலைவரான, நோபல்பரிசுக்குழு தலைவர் பேராசிரியர் பிரான்சிஸ் சேயர்ஸ்ரட்,கமிசன் உறுப்பினர்:சாமிமக்கள் மன்ற தலைவர் ஊலே கென்றிக் மாக்கா அவர்களிடம் உரையாடிய ஆசிரியர் தமிழர் சார்பில் வாழ்த்தும் தெரிவித்து ஈழத்தமிழர் அவலம் பற்றியும் எடுத்துக்கூறினார்.

3.நோர்வே,ஹமர்பெஸ்டில் நெஸ்லே மீன்தொழிற்சாலையில் பணிபுரிந்த யாழ்.பண்டத்தரிப்பை சேர்ந்த கனகலிங்கம் மணிவண்ணன்(26) ஓடிக்கொண்டிருந்த இயந்திரத்துள் தவறிவிழுந்து அகாலமரணமானார். அருகே பணிபுரிந்த பின்லாந்து பெண்மணி அதிர்ச்சியால் மயக்கமுற்றதால்,மின்தடுப்பை உடன் யாரும் நிறுத்தமுடியாதநிலையிலே பரிதாபமாக உயிர் இழந்தார். இவர் செல்வராசா ராகினி(21) எனும் பெண்ணை,அண்மையில் இந்தியா சென்று மணமுடித்து திரும்பியவர்!என அறியவருகிறது.தொழிலக பாதுகாப்புமுறைகளில் இளந்தமிழர்கள் மிகமிக அவதானமாக இருத்தலும்,அறிவுறுத்தல்களை தமிழில் மொழிபெயர்த்தோ,அல்லது உரியவர்களிடம் சரியான செய்முறை விளக்கம்பெற்றோ கடமைபுரிவது முக்கியம். பலர், இயந்திரங்களில் கை,விரல்,உடுப்பு மாட்டுப்பட்டு விபத்துக்குள்ளானமை முன்பும் பலதடவை நடந்துள்ளதால் மிகமிக அவதானமாக இருப்பது அவசியமாகும்.

4.சாது.செல்லப்பா எனும் பிராமணர் கிறிஸ்தவராகமாறி கிறிஸ்தவபிரசாரம் செய்துவருகிறார். இந்துசமய வேதங்களை கற்றறிந்த இவர்,ஒஸ்லோ வந்துள்ளார். இவர் இந்துக்களை கிறிஸ்தவர்களாக்க முயற்சிப்பதாகவும்,இந்துசமயத்தை அவமதிப்பதாகவும் சில இந்துக்கள் சர்வதேச தமிழரிடம் குறைப்பட்டுக்கொண்டனர். கிறிஸ்தவர்களாகவும்,இஸ்லாமியர்களாகவும் இந்துக்கள் மாறவேண்டியஅவசியமில்லை!எனவும் அவரவர் தத்தம் சமயத்தில் நல்லமனிதர்களாக வாழ்ந்தாலே உலகமக்கள் அனைவரும் நலம்பெறலாம்! எனவும் அவர்கள் கூறினர்.

5.ஜேர்மனி,பிறேமன் பூவரசுகலைஇலக்கியபேரவையின் இலக்கியசந்திப்பு 8.7.98 இந்துமகேஷ் தலைமையில் ரெனெவர்-கலாசாரமண்டபத்தில் நடைபெற்றது.ச.தேவராசா,க.பாலசுப்ரமணியம் சாந்தகுமாரி,புவனேந்திரன்,ஞானரட்ணம்,சந்திரபாலன்,மனோகரன்,ரமேஷ்,கந்தசாமி,குணராசன் மகேந்திரமூர்த்தி,மதி,ராஜமுருகவேல்,குலதாசன் ஆகியோருடன் சர்வதேச தமிழர் ஆசிரியர் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டார். சர்வதேசதமிழர் பலரையும் இணைத்து கருத்துப்பரிமாற்றத்துக்கு உதவுவதையும்,நோர்வே பத்திரிகைவிருது கிடைத்தமையையும் இந்துமகேஷ் பாராட்டினார். பூவரசு வரலாறு,வளர்ச்சி,எழுத்துப்பணி பற்றியும் எடுத்துக்கூறிய அவர் கலை இலக்கியபேரவை பணிகள் பற்றியும் விளக்கினார். சர்வதேசதமிழர்-ஆசிரியர் தனது சிறப்புரையில் சர்வதேசதமிழர் நோக்கம்,அனுபவங்கள்,மீள்தகவல்,நோர்வே பத்திரிகை சுதந்திரம்,பத்திரிகைதுறையில் விஞ்ஞானரீதியானஅணுகுமுறைகளின் (கருத்துக்கணிப்புகள்,ஆய்வுகள்) முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார்.பிறேமன் தமிழ்த்தொலைகாட்சிக்கு ஆசிரியரின் பேட்டியை ராஜமுருகவேல் எடுக்க, ரமேஷ் ஒளிப்பதிவாக்கினார்.
பேர்லினில் எழுத்தாளர் கருணாகரமூர்த்தியையும், சந்தித்து ஆசிரியர் உரையாடினார்.

சுவீடன்: வ.சத்தியவான்; ஜேர்மனி: த.புவனேந்திரன்: 02304 82811நெதர்லாந்த்: ஈசன் டென்மார்க்: பாரதி பாலன் ,வேலணை பொன்னண்ணா, ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: பற்குணராசா,த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன், இ.கந்தசாமி
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்,வர்ண.இளஞ்செழியன்,விதுரன்; சுகந்தி தில்லையம்பலம் குருநாகல்: எஸ்.ரமேஷ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்; களுவாஞ்சிக்குடி: வி.காந்தகுமார்மாத்தளை: தவ.சஜிதரன்
திருகோணமலை: மதுமாரி ,தாமரைத்தீவான் கண்டி: எஸ் .மயில்வேந்த ன்; இரா.கனகரத்தினம் அட்டன்:பா.சங்குப்பிள்ளை;
குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; சுவிற்சலாந்த்: மமனோகரன்அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா: பவளம்ப.த்மா

# பாரிஸ்-ஈழநாடு கந்தசாமியுடன் பாரிஸில் ஒரு சந்திப்பு!



1998கோடைவிடுமுறையில் சுவீடன்,பின்லாந்து,டென்மார்க்,ஜேர்மனி,பிரான்ஸ்,பிரிட்டன்,நெதர்லாந்து ஆகியநாடுகட்கு -இன்ரறெயில்- மூலம் குடும்பத்துடன் செய்த பிரயாணம் சுவையானதும்,புதிய,புதிய அனுபவங்களைத் தருபவையாகவும் அமைந்ததுடன்,ஆங்காங்கு எழுத்துத்துறையினரை காணவும்,பேசவும், மற்றும் அகதிகளாக ஐரோப்பாவில் வாழும் தமிழர்வாழ்வுபற்றி ஆழமாகஅறியவும்,உறவினர்,ஊரவர்களைக் கண்டுபேசி,மகிழவும் காரணமாயிற்று.ஆறுமாதம் பனிமழை,இருட்டான பகல்கள்,இயந்திரமயமானவாழ்வு...,இவற்றில் கோடை விடுமுறைகள் புத்துயிர் தருவன அன்றோ! பயணத்தில் சந்தித்த எழுத்துத் துறையினரில் பாரிஸ்-ஈழநாடு கந்தசாமியுடன் உரையாடிய அனுபவம் சுவையானது!

1976ல், யாழ்.இந்துக்கல்லூரியில் உயர்தர கல்வியை முடித்துவிட்டு பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருந்த காலஇடைவெளியில் ஈழநாடுஅலுவலகம் நாடி,வேலை தேடியபோது,தம்பீ!வாரும்!! என அன்புடன் அழைத்து,ஆசிரியர் கோபாலரட்ணத்திடம் பேசி உதவிஆசிரியராக நியமித்த அந்த அன்புள்ளம் இன்றும் அதேபோலவே...! பாரிஸ்வாழ்வும்,பகட்டும் அவரை மாற்றவில்லை! பாரிசில் அவரதும்,துணைவியாரதும் உபசரிப்பும்,அன்பும் அபாரம்!நட்புக்கோர் கந்தசாமி!

1946.6.29ல் யாழ்.சித்தங்கேணியில் பிறந்த இவர் கணேசா வித்தியாலயம்,சுளிபுரம் விக்ரோறியா கல்லூரியில் பயின்று,1966 தினபதியில்,இயந்திரஇயக்குனராக சேர்ந்து பின் ஆசிரியர் சிவநாயகத்தின் தூண்டலால் ஆசிரியபிரிவில்,சேர்ந்தமை குறிப்பிடத்தக்கது. கே.கே.நடராசா ஆசிரியரிடம் கண்டிப்புடன் ஆங்கிலம் பயின்ற அனுபவம் பின்பு சர்வதேச தகவல்,செய்திகளை ஈழதமிழர்க்கு தமிழில் துல்லியமாக,அளிக்க இவருக்குதவியது. சிறுவயதிலேயே தமிழ்,ஆங்கில பத்திரிகை வாசிப்பு இவருக்கு இருமொழியிலும் பாண்டித்தியமளித்தது. கொழும்பில் ஏற்பட்ட தொழிலாளர்சங்க வேலைநிறுத்தத்தால்,குணசேனா கம்பனி பத்திரிகையான தினபதி நிறுத்தப்பட 1973ல் யாழ்.வந்து,கே.பி.கரன் ஆசிரியராக விருந்த பிரபல ஈழநாட்டில் நிருபராயும்,74ல் உதவிஆசிரியராயும் சேர்ந்தார். 1982-86 ல் கொழும்பு ஆசிரியப்பிரிவில் பணிபுரிந்தகாலத்தில்தான் 83-தமிழினஅழிப்புடன் சிதம்பரம் கப்பலில் யாழ்.வந்த இவர்,மீண்டும் 83 கார்த்திகையில் கொழும்பு வந்து பணியில் ஈடுபட்டபோது சிங்களப்போலிசால் தேவையற்ற கைதுக்கு ஆளானார். 15.5.86ல் கைதான இவர் 15.9.86ல் விடுதலையானார்.
ஈ.என்.டி.எல்.எவ். லண்டன் பிரமுகரான சிறீனிவாசன் ஐ.நா.,அமெரிக்க காங்கிரஸ், பிரிட்டிஷ் எம்.பிக்களுக்கு ஈழத்தமிழர் அவலம் பற்றி எழுதிய கடிதப்பிரதியை பாமா ராஜகோபால் அனுப்பிட,கொழும்பிலிருந்து யாழ். பிள்ளையார் பஸ்ஸில் வந்தகடிதத்தால் பஸ் சும்,நிறுத்தப்பட்டு,நடத்துனர்,சாரதியும் அடிவாங்கி கைதானார்கள். கொழும்பில் ஈழநாடு நிறுவன தலைவர் கே.சி.தங்கராஜாவுடன்,கந்தசாமி,பென்சமின் ராஜரட்ணம் இரவுணவு அருந்திக்கொண்டிருக்கும்போதே அந்த மயிர்க்கூச்சிடும் சம்பவம்!சுமார் 10போலிசார் ஜன்னலூடாக துப்பாக்கியால்குறிபார்க்க,உள்ளே வந்த,போலீஸ்அதிகாரி செனிவிரத்ன இவரையும்,பென்சமினையும்,2 தமிழ்சாரதிகளையும் கைதுசெய்தார். தங்கராஜா பாதுகாப்புமந்திரி லலித் அத்துலத் முதலியுடனும், நிருபர் யோகநாதன் பிரபலவழக்கறிஞர் குமார் பொன்னம்பலத்துடனும் தொடர்புகொண்டனர். அனுராதபுரம்,கண்டியில் சிறையிருந்த பின் ஆட்கொணர்வுமனுவழக்கில்விடுதலையானார்.

பின் யாழ்.அலுவலகத்தில் செய்திஆசிரியராகப் பணிபுரிந்துவிட்டு 1990ல் இத்தாலி விசா கிடைத்து பாரிஸ் வந்துசேர்ந்தார். யாழ்.அலுவலகநண்பரும்,ஆசிரியருமான எஸ்.எஸ்.குகநாதனுடன் சேர்ந்து பாரிஸ்-ஈழநாடு வளர்ச்சிக்கு உறுதுணையாக,பலன்கருதாது இணையாசிரியராக உழைத்துவரும் இவர்,இன்று தமிழ்ஒளி,தமிழ்வானொலிக்கும் செய்திகளை அளிப்பதுடன்,இயக்குனர்சபையிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. பலன்,புகழ் கருதாமல் பின்னணியில் உழைப்பு, நட்புக்கு மதிப்பு, பணத்தைவிட மனிதர்கட்கே மதிப்பு! கோபம் வராமை! இதுவே இவரது பலம்! பலவீனம் நட்பு,அன்புக்காக எதையும்விட்டுக்கொடுத்து சேவை,பொறுமையுடன் வாழ்வது!! இதனால் இவர் தேடிக்கொண்டஅன்புள்ளங்கள் பற்பல! பிரபாகரனின் உண்மைப்பக்தனாக விளங்கும் இவர் தமிழீழமே இறுதித்தீர்வு! நமக்குள் ஒற்றுமை அவசியம்!புலம்பெயர் தமிழர் தாயகத்தில் அதிக அக்கறை காட்டவேண்டும்! புலம்பெயர்நாடுகளில் இலங்கைக்கு அந்நிய செலாவணி தரும் பொருட்களை வாங்கக்கூடாது!அது ஆயதம்வாங்கவே உதவுகிறது! என அடித்துக்கூறுகிறார். கிரிக்கட்,கைப்பந்து, கால்பந்துபிரியரான இவர்,பிரான்ஸ்.98 உலக போட்டியை தமிழில் வர்ணனைசெய்து பலரது பாராட்டையும் பெற்றார்.
சர்வதேசதமிழர் பற்றிகூறுகையில்,மக்கள் ஈடுபாடும்,மக்கள்தொடர்பும் அதிகமாக இருப்பது மிகவும் பாராட்டக்கூடியதொன்றே!எனக்கூறி மக்கள் தொடர்பு முக்கியம்!!என்றார் -பிரபு

ஞானப்பிரகாசம் தென்கொரியா :ஏ.யு.எல்.ஏ.ஹில்மி பிஜி: ச.சச்சிதானந்தம் தென்ஆபிரிக்கா: செல்வன்பிள்ளை பொற்ஸ்வானா:
கமலா.வேலுப்பிள்ளை புருணை: கிருஷ்ணராஜா யப்பான்: டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்: கிருஷ்ணன் மலேசியா:
க.மாணிக்கவாசகர், க.கணேசன் அருண் பேராசிரியர்.இர.ந.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்; மு.சந்திர சேகரன்;
யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு:நா.சங்கரன் பர்மா:அப்துல் ரசாக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கொழும்பிலிருந்து யாழ்.வரை..!

## நோர்வேதமிழரின் அனுபவம்..!!

வெளிநாட்டு உதவிஸ்தாபனங்கள்,அனேகமாக ரெம்பிள் றோட்,றக்கா றோட்டிலும்,செஞ்சிலுவைச்சங்கம் கண்டி வீதியிலும் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றன.
அவர்கள் நல்ல உதவிகளை செய்வதாகப் பலரும் கூறினர்.யாழ்ப்பாணம் மற்ற வடகிழக்குக்கு பகுதிகட்கு முக்கியதகவல்கள் உறவினர்கட்கு அறிவிக்கப்பட வேண்டுமானால், அவர்கள் மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
சிலஇடங்களில் தொலைபேசிகள் பொருத்தப்பட்டுள்ளன.சில தபாற்கந்தோர்களில் தொலைபேசி மூலம் தொடர்புகள் கொள்ளலாம்.ஆனால் அதற்கும் கூட பல மணி நேரம் நின்றுதான் கதைக்கலாம்.
சிலர் வெளிநாடுகட்கு கதைப்பதற்காக இரவில் தொலைதொடர்புநிறுவனத்தில் படுத்துக் கொள்வார்கள்.

சில சிங்களப்படையினர் தமிழ் மக்களுடன் மிகவும் அமைதியாகவும்,சந்தோசமாகவும் பழகுவதை அவதானித்தேன்.
நோர்வேயிலிருந்து,சென்ற எனக்கு இது மிகவும் ஆச்சரியமாகவேபட்டது. சில பிள்ளைகளுடன் அவர்கள் விளையாட்டாக கதைத்து பழகுவதைப் பார்க்க மிகவும் ஆச்சரியமாக இருந்தது.சில சிங்கள பெண்படைகளுடன், சில இளம்தமிழ்பெண்கள் சிரித்துக்கதைத்துக் கொண்டிருப்பதையும் கண்டு வியந்தேன்.
யாழ்ப்பாணத்தில் பல இளந்தமிழ்பெண்கள் சிங்களப்படையினரை திருமணம்செய்துள்ளார்கள்!என்று பலர் கூறினார்கள்.அவர்களுக்கும் பிரச்சனைகள் தான்!என்றும் கூறினர்.
சிலர் சுட்டும் கொல்லப்பட்டுள்ளார்கள்.
கொழும்பில் தமிழன் இருப்பதைவிட யாழ்ப்பாணத்தில் தமிழன் ஓரளவு நிம்மதியாக இருப்பதுபோல் தெரிந்தது.கொழும்பில் தமிழன் என்றால் சொல்லத்தேவையில்லை.அவ்வளவு மரியாதைகேடும்,அடிவாங்காத அளவில் ஒரு செல்வாக்கும்!!

ஆனால் யாழ்ப்பாணத்தில் எல்லோரும் தமிழர்கள் என்றபடியால் தமிழன்-சிங்களவன் என்ற பாகுபாடில்லை. புலியா? இல்லையா? என்பதே கேள்வி! கொழும்பில் எல்லாத்தமிழனும் புலிகள்!என்ற தராசில் தான் நிறுக்கப்படுகிறான்.சிங்களமக்களிடம் சிங்களஅரசியல்வாதிகள்,சிங்களப்பத்திரிகைகள் தமிழர்கள் அனைவரையும் புலிகளாகக்காட்டி தாங்கள் நல்லாக இருக்கப் பார்க்கிறார்கள். இந்த உண்மையை என்று சிங்களமக்கள் உணர்ந்து கொள்கிறார்களோ!அன்றுதான் சிங்கள மக்கள் இவர்களை விரட்டிஅடிப்பர்.அந்தநாள் வெகுதூரத்தில் இல்லை.இதே நிலையை ஈழத்தமிழர் அரசியல்வாதிகள் ஏற்கனவே பெற்றுக்கொண்டனர்.அந்தநிலை தெற்கிலும் கட்டாயம் விரைவில் வந்தே தீரும்.

கொழும்பிலும் தென்பகுதியிலும் நடக்கும் பல அசம்பாவிதங்கள் புலிகளால் செய்யப்படுகின்றன!என அரசாங்கம் பொய் சொல்லி மக்களை ஏமாற்றிவருகின்றது.உண்மை அதுவல்ல!சிங்கள இளைஞர்களே இதைச்செய்வதாயும்,அதை மறைத்து புலிகள் மேல் குற்றத்தை போட்டு தமிழர்களை பிடித்து சிறையை நிரப்பி என்ன பயன்?எனவும் சிலர் வினாவினர்.சில குண்டுவெடிப்புகளை சிங்கள படையினரே செய்துவிட்டு தமிழர்களை கைதுசெய்து சித்திரவதை செய்கிறார்கள். பின்பு தமிழர்களிடம் லஞ்சம் பெற்றுவிட்டு, விடுதலை செய்கிறார்கள்!என சில சிங்களமக்களே கூறினர்.

சந்திரிகாஅரசு அளவுக்கு மிஞ்சி படைகளை சேர்ப்பது,வரும்தேர்தலில் தாம் தோற்றால் படையினரைவைத்து ஒரு சர்வாதிகாரஆட்சியை தொடர்ந்து நடாத்தவே!எனவும் சிலர் கூறினர். இனி படைகளை வெளியே அகற்றுவது கஷ்டம்,எனத்தெரிந்தும்,இப்படிச்செய்வது தன்ஆட்சியை தொடர்ந்து வடகிழக்கு பிரச்சனையை சாட்டி நீடிக்கவே!எனவும் ஒரு அரசியல்வாதி கூறினார்.

அனேகமான சிங்களப்படையினர்,யாழ்ப்பாணத்தில் தமிழ் கதைக்கின்றார்கள்.ஆனால் சிங்களப்படைக்கு முகத்தில் சந்தோசமிருப்பதாக தெரியவில்லை. ஒருவிதபயத்துடனே அவர்கள் அங்கிருப்பது தெரிகின்றது. அந்தப்பயம் அங்குமட்டுமின்றி இலங்கை முழுவதும்,சிங்களப்படையினர் முகத்தில்,பீதியுடன் ஆட்களை சோதனையிடுவதன் மூலம் காணக்கூடியதாகவுள்ளது.

திரும்பவும் யாழ்ப்பாணத்திலிருந்து,கொழும்பு புறப்படும் நேரம் வந்தாயிற்று.யாழ்.புகையிரத நிலையத்தை வந்துசேர்ந்த நாம்,அங்கிருந்துதான் பஸ் மூலம் பலாலி விமானநிலையம் புறப்படலாம்.வேறு ஒரு இடத்தாலும் போக முடியாது.
பழைய யாழ்.புகையிரதநிலையத்தின்,அழகெங்கே?இது அழிக்கப்பட்ட இடமாக இருந்தது! தண்டவாளங்களே இல்லை!ஒரே பத்தைகள்! தண்டவாளமிருந்த இடம் தெருவாகிவிட்டது! வாழை,மரவள்ளி தோட்டமும் இருந்தது!!

இவ்வளவு கஷ்டங்களை அனுபவித்துவரும் ஈழத்தமிழர்கட்கு உலகத் தமிழர்களாகிய நாம் எந்தெந்த வழிவகைகளில் உதவலாம்? என முயல்வதுடன்,நிச்சயம்,உதவிசெய்யவும் வேண்டும்.அல்லது நாம் எம் இனத்தையே இழக்க வேண்டிவரும்.(வளரும்)-**பேர்கன்வாசி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# படைப்பாளரிடம் 10 கேள்விகள்

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் கவிஞரேறு அமலதாசன். மலேசியாவில் பிறந்த இவர் 1960ல் சிங்கப்பூரில் குடியேறிய நாள் முதல், சிங்கப்பூரின் பல தமிழ் அமைப்புகளிலும் உறுப்பினராக இருந்து சேவையாற்றி வருகிறார். சிங்கப்பூர், மலேசிய பத்திரிகைகள், இதழ்களில் கவிதைகள் எழுதியுள்ளார். தொலைக்காட்சி, வானொலியில் இவரின் பல பாடல்கள் ஒலி/ஒளிபரப்பாகியுள்ளன. ஏறக்குறைய 1,500 பாடல்கள்-கவிதைகள் எழுதியிருக்கிறார். பல கவியரங்குகள் - கருத்தரங்குகளில் உரையாற்றியுள்ளார்.

**1) உங்கள் கவிதை ஆரம்பம்?**

நான் படித்தது ஆங்கிலப்பள்ளியில். தனியாகத்தான் தமிழ் படித்தேன். 1958ல் தமிழ்முரசு மாணவர் மணி மன்ற இதழில் என் முதல் படைப்பு வெளிவந்தது. தொடர்ந்து அதிலேயே வளர்ந்தேன். தமிழர் திருநாள் போட்டிகளால் ஆர்வமும் திறமையும் வளர்ந்து. ஆரம்பத்தில் சினிமா பாடல் மெட்டில் பாடல்கள் இயற்றி பாடுவேன். அதிலிருந்து மரபுக் கவிதை எழுதத் தொடங்கினேன். "பரிதா மணாளன்" என்னும் மலேசியக் கவிஞர் "மலேசிய தமிழ்க் கவிதைகள்" என்று ஒரு தொகுப்பை வெளியிட்டார். அதில் என் கவிதை இடம் பெற்றது எனக்குக் கிடைத்த மிகப் பெரிய ஊக்கம்.

**2) கவிதை எழுதுவது எதற்காக?**

ஒவ்வொரு மனிதனுக்கும் உணர்வு இருக்கிறது. என் உணர்வுகளை என் பார்வையில் கவிதை வழி சொல்கிறேன். என் கொதிப்புகளை, சமூக அநீதிகளை வெளிப்படுத்துகிறேன். இன்னும் என் முழுமையான எண்ணங்களை எடுத்துச் சொல்லும் கவிதைகளை எழுதவில்லை.

**3) ஆங்கிலத்தில் படித்த நீங்கள் ஏன் இருமொழி ஆற்றலை வளர்த்துக்கவில்லை? சிங்கப்பூரிலும் தென்கிழக்காசியாவிலும் ஆங்கிலம் வழிதானே நாம் அடையாளம் பெற முடிகிறது?**

அன்றைய நிலைமை வேறு. வாழ்க்கை பற்றிய சிந்தனை இல்லை, கவலை இல்லை. தமிழ், தமிழ் உணர்வு என்றே இருந்து விட்டோம். தமிழ் படைப்பாளராக அடையாளம் பெறுவது மிகப் பெருமையான விஷயம். தமிழே மூச்சாக இருந் தோம். அப்படி இருந்திராவிட்டால் தமிழ் பக்கமே வந்திருக்க மாட்டேன். இப்படி இருப்பது பெருமையாகத்தான் இருக்கிறது.

**4) ஏன் நூல் வெளியிடவில்லை?**

நானும் நூல் வெளியிட்டேன் என்று பெருமைக்காக வெளியிட நான் விரும்பவில்லை. என்னைப் பொருத்தவரை என் கவிதைகள் சிறப்பாகவே இருக்கின்றன. தொகுப்பு ஏன்பது மிகத் தரமானதாக இருக்க வேண்டும். உட்கார்ந்து தொகுக்க நேரமில்லை.

**5) கடந்த 10 ஆண்டுகளாக எழுத்தாளர் கழகத் தலைவராக நீங்கள் சாதித்தது?**

1988ல் "தமிழவேள்" விருதை ஏற்படுத்தினேன். சிங்கப்பூரின் சிறந்த தமிழ்ப் படைப்பாளருக்கு வழங்கப் படும் உயரிய விருது இது. முதல் விருது, தமிழ் முரசின் துணையாசிரியராக இருந்த தமிழறிஞர் மெ.சிதம்பரத்துக்கு வழங்கப்பட்டது. நூல்வெளியீடுகள், பல கருத்தரங்குகள், அறிஞர்களுக்கு வரவேற்பு கள் பலவற்றை நடத்தியிருக்கிறோம். 1989ல், 40க்கும் மேற்பட்ட மலேசியக் கவிஞர்ளை இங்கு அழைத்து பெரிய அளவில் கருத்தரங்கம் நடத்தினோம்.

**6) மற்ற மொழி எழுத்தாளர் கழகங்களைப் போல் ஏன் தமிழ் எழுத்தாளர் கழகம் அதிக அளவில் நூல்களை வெளியிடுவதில்லை? படைப்புகளை வளர்க்கும் முயற்சிகளில் தீவிர முனைப்பு காட்டுவதில்லை?**

எழுத்தாளர் கழகத்தின் அடிப்படையே படைப்பை வளர்ப்பது தானே! அவ்வப்போது நூல்களை வெளியிட்டுக்கொண்டு தான் இருக்கிறோம். போட்டிகள், கருத்தரங்குகளை நடத்துகிறோம். பல திட்டங்கள் இருக்கின்றன. எண்ணத்தின் வேகத்தை செயலில் காட்ட முடியவில்லை. கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாகத்தான் தமிழ் எழுத்தாளர் கழகம் ஒரு சீரான முறையில் இயங்கத் தொடங்கி இருக்கிறது. பொருளாதாரம் பெரிய பிரச்னை. படிப்படியாக செய்வோம்.

**7) தலைவராக செய்ய நினைத்து முடியாமல் போன காரியம்...**

முடியாமல் போனது என்று இல்லை. மெதுவாக நடந்து கொண் டிருக்கும் என்று சொல்லலாம். சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரது வரலாறையும் தொகுக்க வேண்டும், உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு நடத்த வேண்டும். அதற்கு முன் சிங்கப்பூரின் நான்கு மொழி எழுத்தாளர்களை இணைத்து ஒரு கருத்தரங்கம் நடத்த வேண்டும்.

**8) சிங்கப்பூர் இலக்கியம் பற்றி?**

ஏறக்குறைய ஐம்பது ஆண்டு களுக்கு மேலாக தீவிரமாக இலக்கியம் படைத்து வருகிறார்கள். இந்தப் படைப்பாளர்கள் இல்லாவிட்டால் தேசிய இலக்கியத்தில் நமக்கு இடமே இருந்திருக்காது. தென்கிழக்காசிய விருதுகள், கலாசார விருதுகள், தேசிய புத்தக விருதுகள் போன்ற விருதுகள் நம்மைச் சிறப்பித்திருக்காது. இவை நம் படைப்பாளர்களால் நமக்குக் கிடைத்த பெருமைகள்.

உலக இலக்கியத்தோடு நம் இலக்கியத்தை ஒப்பிடுவது சரியல்ல. சமகால படைப்புகளோடு ஒப்பிட வேண்டும். குறை சொல்வதாக இருந்தாலும் காரண காரியத்தோடு விளக்க வேண்டும். ஒன்றுமே இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. இன்று இளையர்கள் எழுதுகிறார்கள். எனினும் 50, 60 களில் இருந்த முனைப்பும், களமும் இன்று இல்லை. படைப்பாளர்கள் அடையாளம் கண்டு பாராட்டப் படுவதில்லை. வாசகர்களும் இல்லை. இன்றைய இளையர்கள் இரு மொழியிலும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**9) ஒரு காலத்தில் புதுக் கவிதையை எதிர்த்த மரபுக் கவிஞர்கள் இன்று புதுக்கவிதை எழுதுகிறார்கள்... நீங்கள்?**

புதுக்கவிதையை நாங்கள் யாரும் எதிர்க்கவில்லை. புதுக்கவிதை என்ற பெயரைத்தான் எதிர்த்தோம். புதிதாக ஒரு கவிதை வடிவத்தை அறிமுகப் படுத்தினால் அதற்கு ஓர் இலக்கணம் வகுத்து எழுதுங்கள் என்றுதான் கூறினோம். இன்று புதுக் கவிதைகளில் மிகச் சிறந்த படைப்புகள் இருக்கின்றன. மரபுக் கவிதைகளிலும் குப்பைகள் இருக்கின்றன. மேத்தாவின் கவிதை என்னை மிகவும் பாதித்தது. நல்லது எதையும் நான் ஏற்றுக் கொள்வேன். நானும் உரை நடைக்கவிதைகள் எழுதியுள்ளேன்.

**10) யாரைப் படிப்பீர்கள்?**

எனக்கு தமிழ் உணர்வு ஊட்டியவர்கள் கலைஞரும் அண்ணாவும். பாரதி, பாரதிதாசன் கவிதைகள் படிப்பேன். ஜெயகாந்தன், மு.வரதராசன் கதைகள் படிப்பேன். பொதுவாக எல்லா எழுத்துகளும் பிடிக்கும்.

தமிழ் முரசு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கண்ணதாசனுக்கு.

நான் என்ற எண்ணம்கொண்ட
மனிதன் வாழ்ந்ததில்லையென்றாய்
கவிகள் பல படைத்துச் சென்ற
கவியரசே கண்ணதாசா
சுயநலமே தன்னலமாய் கொண்டு
காசில் உருளும் கலியுகத்தில்
நீதி நேர்மை நெஞ்சம் கொண்ட
மனிதன் எங்கே வாழுகின்றான்
மனிதநேயம் மனிதத்தன்மை
ஏட்டிலேதான் உறங்கிக்கிடக்கு
நேரினிலே காட்டுதற்கு இங்கு
எவனிருக்கிறான் உணர்வுள்ளமனிதனாக
குரங்காய் இருந்த மனிதன் தலையில்
குழப்பம் ஏதும் இல்லையென்றாய்
நாகரீகம் எனும் பெயரில் இன்று
நாய்கரீகம் சுற்ற மனிதன்
காசுதன்னைக் கடவுளாய் கொண்டான்
பாசம் என்றால் ஏதென்று கேட்டான்
யேசு. புத்தன் காந்தி சொன்ன
நீதி மொழியைக் காற்றிலே விட்டான்
தன்னுடலைக் காத்துக் கொள்ள
பிறர் உரிமை தனைப்பறித்தான்
கடவுள் நேரில் வந்தால்கூட
காசு கொடுத்தே வரங்கள் கேட்பான்
காசேதான் கடவுளப்பா - அந்தக்
கடவுளுக்கும் அது தெரியுமப்பா
நீ வரைந்த கவியல்லவா இது?
நன்றி கெட்ட மாந்தரடா
நானறிந்த பாடமடா - என்ற
உந்தன்வரி பேட்டபோது - அதில்
உடன்பாடு நான் கொண்டதில்லை
அனுபவித்துப் பார்த்தபோது - உனை
அரவணைக்கத் துடிக்கின்றேன்
கவிஞனே நீ இருந்திருந்தால் - உனைக்
காண நேரில் வந்திருப்பேன்
கவிஞனே நீயோர் தீர்க்கதரிசி.
ஜாதியில் மேலோர் என்றும்
தாழ்ந்தவர் தீயோர் ரென்றும் பேதமில்லாமல்
எல்லோரும் ஒன்றாய் உறங்கிடும் காடு
தொல்லையின்றியே தூங்கிடும் வீடு
சமரசம் உலாவும் இடம்
சுடுகாடு மட்டும் என்றாய்
அங்கும் மனிதன் உயிர்த்தெழுவதற்கு
ஆண்டவன் வரம் கொடுத்திருந்தால்
சமரசம் உலாவும் இடம்
இவ்வுலகில் எங்குமிராது
அனுபவித்தே வாழ்க்கைதனைக்
கவியாய் வரைந்த கவியரசே
மீண்டும் நீயிங்கு பிறந்துவா - இந்தச்
சமூகத்தினைச் சாட்டையால் அடி
உன் அரிய கவிகளாலே.

ஆக்கம் வன்னேரியூர் பொன்.சிவா
எகர்சண்ட். நோர்வே.

## சர்வதேசதமிழர்கவியரங்கு நீ வாழ்க

சர்வதேச தமிழர் எனும்
சஞ்சிகையே நீ வாழ்க
தரணியெல்லாம் சுற்றி நீயும்
வருகின்றாயே வாழ்க வாழ்க
தமிழர்களை இணைத்திடவே
தரணியில் ஓர் பாலமானாய்
உலகிலுள்ள தமிழர்களின்
இதயத்தில் பூக் கோலமானாய்
கதை. கவிகள் கட்டுரைகள்
தாங்கி நீயும் வந்திடுவாய்
வதை படுகின்ற ஈழத்தமிழன்
செய்தியை ஏன் குறைத்துக்கொண்டாய்?
தமிழ் வளர்க்கும் சேவையிலே
நீயும் கூட சேர்ந்து கொண்டாய்
உனைப் படிக்கும் தமிழரெல்லாம்
வாழ்த்துரைக்க வாழ்த்திடுவாய்
தாய்மொழியை நேசிக்கின்ற
தமிழர் கழுத்து மாலையானாய் - உனைப்
படிக்கும் பிஞ்சு நெஞ்சங்களும்
ஆவார் தமிழ் மேதைகளாய்
மேலும் வளர்க உந்தன் சேவை - உனக்கு
வாழ்த்துச் சொல்ல எந்தன் ஆசை.

வன்னேரியூர் பொன்.சிவா

## கவிதைகள் தடைசெய்யப்படுகின்றன.

கட்டியக்காரனின்
தண்டோரா முழங்கியது.
இதனால் எல்லாருக்கும்
தெரிவிக்கப்படுவது என்னவென்றால்
அரசின் ஆணைப்படி
இனி
சிந்தனைகள் ..... படுகின்றன.

புதிய சிந்தனைகளில்
நமது பழம்பெருமைகளும்
பாரம்பரிய நம்பிக்கைகளும்
சிதைந்து சிதிலமாகிப் போகின்றன.
பெண்கள் மறைத்த துணிகளை
தூக்கி எறிந்துவிட்டு
அப்பாவி ஆண்களை
சஞ்சலப்படுத்துகிறார்கள்...

மாவுத்தர்கள் தூக்கியெறியப்பட்டு
அங்குசங்கள் கைமாறிப்போகின்றன.
பல்லக்கின் திரை விலக்கும்
கருப்பு கரங்கள்...

நமது அங்கீகரிக்கப்பட்ட பண்பாடுகளைச்
சொல்லும் மொழிக்கே
இனி உரிமம் தரப்படும்.
பாதைவிட்டு விலகி ஓடும்
சக்கரங்கள் துண்டாக்கப்படும்.
மாடுகள் அந்தப்புரத்து
கசாப்பு கடைக்கு...
வண்டி ஓட்டிகளின் தோலில்
மிதியடிகள் செய்யப்படும்...

_ இப்படிக்கு மக்களாட்சி.

கனிமொழி

தமிழ்முரசு, கவிதைப் போட்டி
161, KAMPONG AMPAT
#05-03,GOLDLION BUILDING
SINGAPORE 368329

www.tamilarangam.net

# முதல்பரிசு பெற்ற எழுத்தாளருடன் நேர்காணல்!

" உங்களால் வெற்றி முடியும் ", " உயர்வு உன்னிடமே ", " ஊக்கமே உயர்வு தரும் ", " திறமையே நமது செல்வம் ", " நம்பிக்கை நம்மிடமே " போன்ற நூல்களின் ஆசிரியரும் தமிழ்நாடு அரசின் முதற்பரிசை பெற்ற வாழ்வியல் நூல் எழுத்தாளர் திரு. மெர்வின் அவர்களுடன் நேர்முகம்.



<u>நேர்முகம் கண்டவர்</u> .. திரு. இரா. இரவி

<u>நேர்முகம் காண ஏற்பாடு செய்தவர்</u> .. திரு. சி. ராமலிங்கம்

* * *

கேள்வி .. எப்போதும் வெற்றியுடன் வாழ்வதற்கான வழிமுறைகள் என்ன?

அன்பு, அறிவு, உணர்வு, துணிவு, பொறுமை, சுறுசுறுப்பு, உறுதி, செயலாற்றல், ஒத்திகை மேற்கண்டவற்றை கடைபிடித்தாலே போதும் வெற்றி நிச்சயம்.

கேள்வி .. வெற்றிக்கு தடையாக இருப்பது என்ன?

அகந்தை, கோபம், பயம், சோம்பல், விரக்தி, நெகடிவ் எண்ணம், தாழ்வு மனப்பான்மை. இவைகள் தான் வெற்றிக்கு தடையாக இருக்கின்றன.

கேள்வி .. சுய முன்னேற்ற நூல்கள் எழுதவேண்டும் என்ற எண்ணம் தோன்றிதற்கு என்ன காரணம்?

1962ம் ஆண்டு எம்.ஆர். அப்துல்ரகீம் அவர்கள் எழுதிய " கவலைப்படாதே " என்ற நூலை படித்தேன். அந்த நூலை படித்ததன் விளைவு தான். என்னுடைய குரு திரு.எம். அப்துல் ரகீம் அவர்கள் தான். திரு. தமிழ்வாணன் அவர்களிடம் கேள்விகள் கேட்டு வந்தேன். அவரது தன்னம்பிக்கை

## பாரதிய ஜனதா கட்சி

சர்வதேச தமிழர் கண்டேன்.பொன்னேட்டிலே பதிக்கக்கூடிய எழுத்துக்களை காகிதஏட்டிலே தாங்கிவருவதைக்கண்டு வியந்தேன்.சர்வதேச தமிழரால் தமிழ் மக்களின்உரிமைகள்,உறவுகள் மேன்மேலும்கிட்ட விழைகிறேன். அரசியலில் முழுஈடுபாடுள்ள என்னை இந்த இதழ் முழுவதும் படிக்கத்தூண்டியது வியப்பு தொடர்ந்து இதழ் பெறவும்,இணைப்பாளராக பணிபுரியவும் ஆர்வமுண்டு! எங்குதான் செல்வாய் இனி..?வேலணையூர் பொன்னண்ணா கவிதை அருமை!

K. அம்பிகாபதி,
ஒன்றிய அமைப்பாளர்,
பாரதிய ஜனதா கட்சி.

1/94-A, பஜார் தெரு,
சித்தாத்தூர் சி அஞ்சல்,
பின்கோடு : 604 410.

www.tamilarangam.net

பதில் எனக்கு திருப்தி தந்தன. பின்னர் நாமே ஏன் வாழ்வியல் நூல்கள் எழுதக்கூடாது என்ற எண்ணம் தோன்றியது. அப்துல் ரகீம் அவர்களின் நூல்களை நூலகத்தில் தேடிச் சென்று படித்த பயிற்சி தான் என்னை ஒரு வாழ்வியல் நூல் எழுத்தாளனாக உயர்த்தியது.

கேள்வி

இன்றைய இளைஞர்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

நம்பிக்கையோடு இருக்க வேண்டும். நல்ல நூல்களை படிக்க வேண்டும். உயர்ந்த நோக்கங்களை கொண்டிருக்க வேண்டும். இளைஞர்கள் சினிமா, அரசியல் இவை இரண்டிலும் இருக்கும் ஈடுபாட்டை தவிர்த்துவிட்டால் உறுதியாக வெற்றி பெறலாம்.

கேள்வி உங்களுடைய படைப்புகளில் உங்களை மிகவும் கவர்ந்தது எது?

என்னுடைய 82 படைப்பும் சிறந்தது தான். என்னை கவர்ந்தது தான். எனக்காகவே எழுதிய நூல்கள் அத்தனையும். நான் பசியோடு இருக்கவோ, கிழிந்த ஆடை அணியவோ விரும்புவதில்லை. முழுநேர எழுத்தாளனாகவே இருக்கின்றேன். எனக்கு திருப்திகரமாகவே உள்ளது. " வாழ்க்கை உன் கைகளிலே " என்ற எனது நூல் 1969ம் ஆண்டிலிருந்து இதுவரை 10 முறை பிரசுரமாகி விற்று தீர்ந்து இருக்கின்றது. எனக்கு பெயர் பெற்று தந்தது வாழ்வியல் நூல்கள் தான்.

கேள்வி

உங்களுடைய நூல்களை படித்துவிட்டு பயன் அடைந்த வாசகர் பற்றி கூற முடியுமா?

நிறைய பேர் கூறமுடியும். தற்கொலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்த ஒரு வாசகர் எனது நூலை படித்ததன் காரணமாக தற்கொலை முயற்சியை கைவிட்டதாக என்னிடம் நேரில் வந்து கூறினார். கூலி வேலை பார்த்து வந்த வாசகர் ஒருவர் எனது வாழ்வியல் நூல்களை படித்து தன்னம்பிக்கை பெற்று ஆட்டோவிற்கு அதிபதியானதாக தெரிவித்தார். சண்டை சச்சரவுகளுடன் வாழ்ந்து வந்த கணவன், மனைவி எனது நூலை படித்து பின்பு ஒற்றுமையுடன், மகிழ்ச்சியாக வாழ்வதாக மடல் எழுதி இருந்தார்கள். தொழிலில் மேதை ஜி.டி. நாயுடு சாதாரணமாக யாரையும் பாராட்ட மாட்டார். அவரே எனது நூலை படித்துவிட்டு பாராட்டி மடல் எழுதி இருக்கின்றார் என்று மடலை காண்பித்தார் மடல் குறிப்பிட்டிருந்த முக்கிய வரிகள்

" இந்த புத்தகம் மற்ற நாவல்கள், கதைகள் போல வைத்தியம் பிடித்தவர்கள், கற்பனை செய்வது போலன்றி வாழ்க்கையில் எப்படி இருக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்வதால் இதை ஒவ்வொரு இளைஞனும் படிக்க வேண்டிய புத்தகம் என்று சொல்லத்தேவையில்லை. உம்முடைய முயற்சி வெற்றி அடைய விரும்புகிறேன். "

கேள்வி வாழ்க்கையை விரக்தியாகவே எல்லாம் விதி என சோம்பி வாழும் மனிதர்கள் பற்றி....

விதியை மதியால் வெல்லலாம் என்றனர். முன்னோர்கள் விதி விதி என வெந்து சாகாதே! என்றார் மகாகவி பாரதியார். இயலாமையையும் சோர்வையும் சோம்பேறித்தனத்தையும் விதி என்று விதி மீது பழி போடுவதை நிறுத்த வேண்டும். விதி என்று ஒன்றுமே கிடையாது. 1001 தடவை தோல்வி கண்ட தாமஸ் ஆல்வாய் எடிசன் விரக்தியால் சோர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரவிலும் சூரியனைப் போல ஒளி உண்டாக்குவேன் என்று எடிசன் கூறிய போது எல்லோரும் அவரை பைத்தியக்காரன் என்று ஏசினார்கள். ஆனால் அவர் சோர்ந்து விடவில்லை 1002 தடவை முயன்றி வெற்றி கண்டார். விளக்கு எரிந்தது. சோர்வைவிடுத்தி தொடர்ந்து முயன்றால் வெற்றி நிச்சயம். கதவைத் தட்டுங்கள் நிச்சயம் திறக்கும்.

**கேள்வி**

சாதி மதம் சண்டைகள் ஒழிய தங்கள் கூறும் கருத்து என்ன?

எந்தமதமும் தனது கடவுளை உயர்ந்தவர் என்று கூறுங்கள் தவறில்லை. ஆனால் மற்ற கடவுளை விட மற்ற சாதியை விட நான் உயர்ந்தவன். எனது கடவுள் உனது கடவுளைவிட உயர்ந்தது என்று ஒப்பிட்டு பேசும் பொழுது சண்டை உருவாகின்றது. உதாரணத்திற்கு மற்றவரிடம் பேசும் பொழுது எனது தாய் உயர்ந்தவர் சிறந்தவர் என்று கூறுங்கள். கோபப்பட மாட்டார். ஆனால் அவரிடமே எனது தாய் உனது தாயை விட உயர்ந்தவர் என்று கூறும் போது தான் கோபம் கொள்வார். இன்றைக்கும் இந்து மதத்தவர் தீபாவளி பட்சணங்ககளான கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கொடுக்கும் வழக்கம் உள்ளது. அதே போன்று கிறித்தவர்கள் கிறிஸ்துமஸின் போது கேக் மற்ற மதத்தவருக்கு கொடுப்பதும். முஸ்லீம்கள் ரம்ஜானின் போது பிரியாணி மற்ற மதத்தவர்களுக்கும் தந்து சகோதரர்களாக வாழ்ந்து வருகிறார்கள். கோபம் கொள்வதை விடுத்து அன்பு செலுத்தி மனிதனை மனிதன் நேசித்தால் மனித நேயம் கொண்டால் சண்டை சச்சரவு-களுக்கு வாய்ப்பு இருக்காது.

இந்தியா அணுகுண்டு வெடித்து சோதனை நடத்தியது பற்றி தங்கள் கருத்து என்ன? எனக்கு பிடிக்காதது அரசியல் இருந்தாலும் கூறுகின்றேன்.

ஒருபுறம் வெற்றி மறுபக்கம் தோல்வி இந்தியா உலக நாடுகளிடம் கடனாளியாக இருந்து கொண்டு இப்போது இது தேவையில்லாத செயல் என்றே தோன்றுகின்றது. அணுகுண்டால் பாதிக்கப்பட்ட ஜப்பானிடம் நிதி உதவி பெற்றுக்கொண்டு அந்த பணத்தில் அணுகுண்டு சோதனை நடத்திட நமக்கு தகுதி இல்லை. மேலும் இனி அணுகுண்டு சோதனை நடத்திட மாட்டோம் என்ற இந்தியாவின் அறிவிப்பு பாராட்டுக்குரியது

**கேள்வி** .. கிளிண்டன், மோனிகா விவகாரம் பற்றி தங்கள் கருத்து என்ன?

ஒவ்வொரு வீட்டிலும் கழிவறை உண்டு அதனை ஆராய்ச்சி செய்வது அவசியமன்று. தனிப்பட்ட மனிதனின் சின்ன உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் தரக் கூடாது. இந்த விசயத்திற்கு இவ்வளவு விளம்பரம் தேவையற்றது. பெரிய வெள்ளைச் சுவற்றில் ஒரு சிறிய கரும்புள்ளி இருந்தால் அதுதான் அனைவரின் கண்ணிலும் படும். பொதுவாக அடுத்தவரை பற்றிய விசயத்தில் காட்டும் ஆர்வத்தை முதலில் தவிர்க்க வேண்டும். கிளிண்டன் அமெரிக்கவை, பொருளாதார ரீதியாக முன்னேற்றி இருக்காரா? என்பதை பாருங்கள். அவரும் தவறு செய்து இருக்க கூடாது. பொதுவாக சபலங்கள் மனித இயல்பு இதனை அவர் அடக்கி இருக்க வேண்டும். இருந்த போதிலும் அவரது இந்தரங்க விசயத்திற்கு உலக அளவில் இந்த அளவிற்கு விளம்பரம் என்பது தேவையற்ற ஒன்றாகவே கருதுகின்றேன்.

கேள்வி .. இன்றைய திரைப்படங்கள் பற்றியும் தொலைக்காட்சி பற்றியும் தங்கள் கருத்து என்ன?

இரண்டும் ஒழிந்தால்தான் நாடு உருப்படும். ஒரு நடிகர் பேட்டியின் போது கூறினார் நாங்கள் கெட்டதை சொல்லி விட்டு கடைசியில் நல்லதை கூறுகின்றோம் என்று 2-3/4மணி நேரம் வன்முறை வெட்டி, குத்து, ஆபாசம், கற்பழிப்பு, இவைகளை கூறிவிட்டு கடைசி 5 நிமிடம் நீதி போதனை செய்தால் போதுமா? முதலில் வன்முறைகள் தான் மனதில் பதியும். இரவில் படுக்கப் போகும் முன் வன்முறைக் காட்சிகள் நிறைந்த திரைப்படத்தையோ, தொலைக் காட்சியை பார்த்து விட்டு படுத்தால் நரம்புகள் பாதிக்கின்றன என்று விஞ்ஞான ரீதியாக கூறி உள்ளனர். நூறாவது நாள் என்ற படத்தை பார்த்து விட்டு ஜெயபிரகாஷ் என்ற வாலிபன் தனது சொந்த குடும்பத்தை சேர்ந்த 13 பேரை கொலை செய்தான். இப்படி படத்தை பார்த்து வன்முறைக்கு ஆளானவர்கள் பட்டியலை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் யாரேனும் ஒருவர் நான் இந்தப் படத்தைப் பார்த்துதான் நான் நல்லவன் ஆனேன் என்று இதுவரை கூறி நீங்கள் கேட்டதுண்டா? ஞாயிற்றுக் கிழமையானால் நீங்கள் - சொந்த பந்த வீடுகளுக்கு சென்று பார்த்தால் தெரியும். சொந்த சகோதரி வீட்டிற்கு சென்றால் கூட நம்மை பார்த்து விட்டு தொடர்ந்து தொலைகாட்சியில் நடக்கும் திரைபடத்தை காண சென்று விடுவார்கள். படம் முடிந்த பின்புதான் நம்மை வந்து உபசரிப்பார்கள் பாசத்தை அன்பை கூட தள்ளி வைக்கக் கூடிய முறைச் சலவை செய்பவைதான் திரைப்படங்களும், தொலைக்காட்சிகளும். இவை ஒழிந்தால் தான் நாடு உருப்படும். நீங்கள் கேட்கலாம் டிஸ்கவரி சேனல் போன்ற நல்ல சேனல் இல்லையா? என்று அதை எத்தனை பேர் பார்க்கிறார்கள்? இந்த தொலைக் காட்சியால் மாணவர்களின் படிப்பு பாழாகி வருகின்றது புத்தகம் படிக்கும் பழக்கத்தையும் தொலைக்காட்சி ஒழித்து வருகின்றது. சமுதாயத்திற்கு நன்மை பயக்கவில்லை.

கேள்வி .. வாழ்வியல் நூல் எழுத்தாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதன் காரணம் என்ன?

வாழ்வியல் நூல் மற்ற எழுத்தாளர்களைப் போல கற்பனையாக கதை ஆக்க முடியாது. - நிறைய நிறைய புத்தகங்கள் படிக்க வேண்டும். பட்டறிவு வேண்டும் அதிக அளவில் - படித்து படித்து நம்மை வளர்த்துக் கொண்ட பின்புதான் வாழ்வியல் தன்னம்பிக்கை நூல்கள் எழுத முடியும். அதனால்தான் வாழ்வியல் நூல் எழுத்தாளர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

கேள்வி .. இலங்கைத் தமிழர் இன்னல் தீர தாங்கள் கூறும் தீர்வு என்ன?

இரு தரப்பினரும் வன்முறையை கைவிட்டு பேச்சு வார்த்தையில் உடன்பாடு காண வேண்டும். விலை மதிப்பற்றது மனித உயிர்கள். எந்த தரப்பிலும் உயிர்ச் சேதம் ஏற்பட்டாலும் உலக மனித சமுதாயத்திற்கு அது இழப்புதான், என்பதை உணர்ந்து - மனித நேயத்துடன் செயல்பட வேண்டும். புத்தரை கடவுளாக கொண்ட சிங்களவர்கள் வன்முறையை கையாளுவது முற்றிலும் புத்தருக்கு செய்யும் அவமரியாதையாகவே கருதுகிறேன்.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

.... எங்கள் அதிஸ்ரம் இன்று தனுவின் கண்களில் நாங்கள் படவில்லை. வினியை வேளைக்கே அழைத்து வந்ததாய் அவளுக்குத் தோன்றி இருக்க வேண்டும். அல்லது இன்னும் அதிக நேரம் வெளியே இருக்க எண்ணி இருப்பாளோ தெரியாது. அவள் அமைதி இல்லாது வண்டியை அங்கும் இங்கும் உருட்டினாள். எனக்கு அவள் மனநிலை புரிந்தது. அவளைச் சமாதானப் படுத்தி ஏதாவது படிக்க வைத்துவிட்டு இரவுச் சாப்பாட்டிற்கு ஆயுத்தம் செய்ய எண்ணினேன்.

வினி.
ம்?
ஏன் அங்கையும் இங்கையும் அலையிறா?
நான் வெளிய போகோணும்.
நீ அம்மாவின்ர பிள்ளையெல்லே.
அதுக் கென்ன இப்ப ?
அமைதியா ஏதாவது பாடம் படிப்பியாம்.
நல்ல வெய்யில் அம்மா வெளியால.
ஒன்பது மணியாகுது. இனிவேண்டாம் . அம்மா சொல்லுறமாதிரிக் கேட்ப்பியாம். நான் பிள்ளைக்கு நூடில்ஸ் சமைச்சாறனார்.
நீ என்ன எண்டாலும் சமையம்மா நான் வெளியால போகோணும்.
பிளீஸ் வினி.
எனது குரல் உடைந்து போய்விட்டது. இது ஒருவித பலவீனம்தான். சில வேளைகளில் என்னால் கட்டுப் படுத்த முடியாமல் போகிறது. இருந்தாலும் இதற்கு அதிக சக்தி இருக்கிறது.
சரியம்மா. நான் படிக்கிறன்.
நல்ல பிள்ள.

வினியின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினேன். பின்பு சமையல் அறையை சாத்திவிட்டு நான் சமைக்கத் தொடங்கினேன். எனது எண்ணங்கள் எல்லாம் மாலினியைச் சுற்றியே அலைந்தது. என்னைவிட வயது குறைந்தவளான அவளும் வாழ்கையில் அதிக வேதனையைத் தாங்கிக் கொண்டுதான் வாழ்கிறாள்.

வேதனைக்குகூட ஒரு விதி இருக்கலாம். சிறிய வேதனைகள் அதைவிடப் பெரிய வேதனைகள் ஏற்படும் போது அல்லது கேள்விப்படும் போது மறக்கடிக்கப் படுகிறது. உலகத்திலே வேதனைப்படும் ஒவ்வொருவரும் தான்தான் இந்த உலகில் வேதனைப்படுவதாய் எண்ணிக் கொள்கிறார்கள். அவர்களைவிட அதிக வேதனையை , இழப்பைச் சுமப்பவர்கள் இந்த உலகில் இருக்கிறார்கள் என்பதை அறிந்தால் நிட்சயம் அவர்கள் வேதனை குறையலாம். உண்மை. நானே மாலினியின் வேதனையைப் பார்த்த பின்பு . எனது வேதனையின் பாரம் குறைவதாக உணர்கிறேன்.

வேதனை யாருக்கும் ஏகபோக சொத்தாகி விடுவதில்லை. எங்களைவிட அதிக வேதனைப் படுபவர்களும் உண்டு. அவர்களோடு ஒப்பிடும் போது நாங்கள் படும் வேதனை அற்பமே. இப்படி மற்றவர்களும் நினைப்பார்களோ தெரியவில்லை. அப்படி நினைத்தால் அதிகமானபேர் வேதனையிடம் இருந்து விடுபட இதுவும் ஒருவழியாகிவிடும். நான் இவ்வளவு காலமும் நான்தான் உலகிலே வேதனைப்படுவதாய் புழுங்கிக் கொண்டிருந்தேன். அந்தப் புழுக்கம் மாலினியைக் கண்டதும் நிலை குலைந்து போயிற்று. வேதனை உலகில் எவருக்கும் வரக்கூடாது. அப்படி வந்துவிட்டால் நான்தான் உலகிலே தனிய வேதனைப்படுவதாய் எண்ணக்கூடாது. எங்களைப் போலே எத்தனை உயிர்கள் வேதனைப் படுகின்றன என்பதற்கு அளவில்லை. வேதனையை மனதிலே பூட்டி வைத்துக்கொண்டு வெளியே சிரித்துதிரியும் உயிர்களுக்கும் அளவே இல்லை. வேதனை எனக்குத்தான் சொந்தமென எண்ணும் முட்டாளாய் நான் இனி இருக்கக்கூடாது.

# மூடங்கள்....

## காரையூரான் இ. தியாகலிங்கம்

பூனை கண்ணை மூடிக் கொண்டு உலகம் இருண்டு விட்டது என எண்ணிக் கொள்ளுமாம். அப்படித்தான் உலகிலே நாங்கள் மாத்திரம் வேதனைப்படுவதாய் எண்ணுவதும். நான் இதில் இருந்து முழுமையாக விடுபடவேண்டும். வேதனையில் இருந்து விடுபட்டு , உள்ளதோடே ஒரு சந்தோசமான வாழ்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். நான் மாத்திரம் அல்ல, மாலினியையும் அப்படியான ஒருவாழ்கைக்கு இட்டுச்செல்ல வேண்டும். வேதனை என்பது மட்டும் வாழ்கையல்ல. அதுவும் வாழ்கையின் ஒரு படி. புதுவிதமான மனிதனை , அல்லது அனுபவத்தை உண்டுபண்ணும் ஒருபடி. அதைத் தைரியத்துடன் மிதித்துப் பின்னே தள்ளிவிட்டு முன்னேற வேண்டும். ஒவ்வொரு படியாக கடந்து இழந்ததை ஏற்றுக் கொண்டு இன்னொரு வாழ்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். இதை எப்படிக் கடப்பது எனத் தயங்குவதில் , குழம்புவதில் அர்த்தமில்லை. நானும் அந்தப் படியைக் கடக்கிறேன். என்னைப் போன்றவர்களையும் கடக்கவைக்கிறேன்.

எனது சிந்தனை இடையறுந்தது. அது வெளிச்சத்தத்தால்த் துண்டுபட்டது. வெளியே இந்த நாட்டு இளைஞர்கள் காரில் செல்வதை அறிய முடிந்தது. எனது சிந்தனையை அவர்கள் இலகுவாகக் குலைத்துவிட்டுச் சென்றார்கள். கார்கதவுகள் மூடி இருக்கும் போதே இப்படி இடிக்கும் சத்தம் கேள்க்கிறதே உள்ளே எப்படி அவர்களால் கேட்டுக் கொண்டு இருக்க முடிகிறது? அவர்களுக்கு சில வேளை காது கேள்ப்பது குறைவாக இருக்க வேண்டும். சிலவேளை இப்படியான சத்தத்தை கேட்டு காது தனது கேள்க்கும் சக்தியை மந்தமாக்கி இருக்க வேண்டும். என்னால் அதிக சத்தத்தை ரசிக்க முடிவதில்லை. மென்மையான மனம் கொண்டவர்கள் அதிக சத்தத்தை விரும்பமாட்டார்களோ? நான் மென்மை யானவளா? எது மென்மை? அதை எப்படிப் பகுப்பது? இது எனக்குத் தேவையற்ற விவாதமா? எது சரியாத் தெரியாவிட்டாலும் , அதிக சத்தம் மனதின் சாந்தத்தை உடைத்து எரிச்சலை உண்டு பண்ணுகிறது என்பது புரிந்தது. எரிச்சலோடு மட்டும் நின்று விடுவதில்லை. கோபத்தையும் கூட்டி வருகிறது. இது அற்ப விடயம் . கண்காணாத அவர்களையோ , அல்லது பழக்காமானவர்களையோ இதற்காகக் கோபிக்க முடியாது. மனதுமாத்திரம் அவர்களைச் சபித்துக் கொள்ளும். அதற்குத் தடைபோட என்னாலும் முடிவதில்லை. அமைதியான உலகத்தை ஏன் இவர்கள் கெடுக்கிறார்கள். திரும்பவும் அந்தக் கேள்வி என்னுள்.......

நான் மீண்டும் எனது சிந்தனையையும் பார்வையையும் சமையலில் திருப்பினேன். பார்வை சமையலில் இருந்தாலும் சிந்தனைமாத்திரம் என்வயப்படாது மாலினியை நோக்கி ஓடியது. இந்த ஓட்டம் எப்போது நிற்கும்? உடல் விறைத்து கட்டையாகிப் பெட்டியில் போகும் போது? அப்போதும் ஆவி போசுமோ என்னவோ?......

என்பிள்ளைக்கு உடல்ஊனம் என்றால் தன்கணவனுக்கு மனஊனம் மன்னித்துக்கொள் அக்கா என்கிறாள். அவள் சொல்வதிலும் நிறைய உண்மைகள் இருக்கின்றன. இந்த உலகத்திலே மனஊனம் உள்ள மனிதர்கள்தான் அதிகம். அதனால்தான் உலகம் அமைதி அற்று தவிக்கிறது. உலகம் ஊனம் உள்ளதாய் இருக்கிறது. வன்முறையும் அநீதியும் கொடிகட்டிப் பறக்கிறது. மற்றவர்களின் வேதனையிலேயே இன்பம்காணும் மனஊனம் இந்த உலகில் மலிந்துபோய் கிடக்கிறது. இல்லையென எவரால் மறுத்துவிட முடியும்?

தனுவின்மீது நான் கோவிப்பது முழு முட்டாள்தனமான காரியமோ? வினியின் மேல் அவன் எரிந்து விழுவதைப் பொருட்ப்படுத்தக் கூடாதோ? அதெப்படி விடமுடியும்?

சர்வதேசதமிழருக்கு சந்தாதந்தோர்க்கு இதயபூர்வநன்றிகள்!மற்றையோர்தொடர்ந்து பெற விரும்பின் சந்தா தந்து ஆதரவு தருக !
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக!
முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

www.tamilarangam.net

உடல் ஊனங்கள் சில நிவர்த்தி செய்யப் படமுடியாததாய் இருக்கிறது. மன ஊனங்கள்சில அப்படி இல்லையே. நீ திருந்த வேண்டும் என நினைத்தால் உன்னை யாராலும் தடுத்து நிறுத்த முடியாதே. மனம் உறுதி கொண்டு விட்டால் உலகத்தில் அந்த ஊறுதியை எவராலும் கலைக்க முடியாதே. தனு திருந்தமுடியும். தன்னைத் திருத்திக் கொண்டு , வினி போன்ற பிஞ்சுகளுடன் அன்பாக பழகமுடியும். அவன் மனதில் உறுதி பூண்டால் இது அவனால் நிட்சயம் ஆகக்கூடிய விடயம்தானே?

மனிதனின் மனவியாதி சிலகட்டத்தை கடந்தவிட்டால் , திருந்துவதற்கு அவனுக்கு வெளியுதவி வேண்டும் . அப்படியான நிலைமையிலா தனு இருக்கிறான்? யாருக்குத்தெரியும் அது? இந்த மாலினி ஏன் அவனை மனநல மருத்துவரிடம் கூட்டிச் செல்லக்கூடாது?

வினியின் நிலை அப்படி யல்ல. அவளின் சும்பல் எடுபட்டு கால் நிமிர்ந்தால் அது உலக அதிசயம்தான். சில முடங்கள் பயிற்சியால் நிவர்த்தி செய்யக் கூடியவை. மனதில் அங்கு உரம் இருக்கும் போது பயிற்சி பலனளிக்கும். அப்படி பட்ட முடமல்ல வினியினுடையது. முற்றாய் சும்பிப்போன கால்களை உயிர்பிக்க முடியாது. தனு மாறலாம். தனது மனமுடத்தை விட்டு வெளியே வரலாம். மனமுடம் , உடல் முடமாய் இருப்பவர்களுக்கு அதிகமாக இருக்கிறது. அனேகர் தொடர்ந்தும் முடமாய் இருப்பதற்கு அவர்களது மனமுடமே காரணமாய் இருக்கலாம்.

சமையல் முடிந்துவிட்டது. வினி பசியில் இருப்பாள். இதற்குமேல் சமையல் அறையில் நின்று சிந்திக்குமளவிற்கு எனக்கு நேரம் இருக்கவில்லை. எனக்கும் வினிக்கும் சேர்த்தே ஒரு பாத்திரத்தில் உணவு எடுத்துக் கொண்டு அவளை நோக்கி நான் சென்றேன்.

# 4 மோதல்

அன்று வெள்ளிக்கிழமை. எனக்கு வெள்ளிக்கிழமை என்றால் நின்மதி இருப்பதில்லை. வினி குழந்தைதானே ? அடம்பிடித்து வெளியே சென்று விடுவாள். அவள் வரும்வரையும் நெஞ்சைக் கையிலே பிடிக்க வேண்டிய அவஸ்தை. இப்படி அவஸ்தையோடு எவ்வளவு காலம் வாழலாம் என்பது கேள்விக்குறியே. வீடு மாறுவோமோ என்கின்ற எண்ணம் வந்தாலும் அதற்கும் சந்தர்ப்பம் இல்லை. ஊனம்உற்றவர்கள் வண்டியில் உலாவுவதற்கென விட்டு வீதியாய் கட்டிய வீடுகள் இந்தக் கட்டடத்தில்தான் இருக்கிறது. இவற்றின் அமைப்பு , நீள அகலம் , கதவுகளின் பெருப்பம் எல்லாம் வினி வண்டியுடனேயே எங்கு வேண்டும் என்றாலும் சென்று வருமளவிற்கு வசதியாக இருக்கிறது. இப்படிச் சாதராண வீடுகள் இருக்காது. இங்கு வினியோடு நான் வசிக்க முடியாது . தனு எங்களுக்குப் பெரிய பிரச்சனையாகிக் கொண்டு வருகிறான். இந்த வீட்டை விட்டு எங்கே போக முடியும் என்பது என்னைப் பொறுத்த மட்டில் விடை காணமுடியாத வினாவாகிவிட்டது.

நான் சிந்தனையில் இருக்கும் போதே தனு இருமுறை பெரிதாகக் கத்தியது கேட்டது. தனு இன்று வெளியே செல்லவில்லை. மூன்று மணிபோல வாடகைக்காரில் வந்து இறங்கி போத்தல்களோடு மேலே சென்றிருந்தான். சிலவேளை இன்று வீட்டிலேயே குடிப்பாய் இருக்கலாம்.

அவனுக்கு வெறியேற மாலினியைத் திட்டுவது வழக்கம். இன்றும் தொடங்கிவிட்டான். அவன் கீழே இறங்கி வந்தாலும் வந்து விடுவான் . அதற்குள் நான் வினியை அழைத்து வரவேண்டும். நான் வெளியே செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும்போதே தனு நடந்துவரும் சத்தம் கேட்டது. எனக்கு நெஞ்சுநீரெல்லாம் வரண்டு கொட்டாவி கொட்டாவியாக வந்தது.
இது என்ன அவஸ்தை? சீ நான் ஏன் இவ்வளவு பயப்படுகிறேன்? என்ன செய்துவிடமுடியும் இந்தத்தனுவால்? என்மீதே எனக்கு எரிச்சல் மூண்டது. எல்லாவற்றையும் ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு நான் கதவைத் திறந்து கொண்டு வெளியே போகவும் தனு கீழ் வாயலை அடையவும் சரியாக இருந்தது.

வினி என்னை அடிக்கடி சங்கடத்தில் மாட்டி விடுகிறாள். வேண்டும் என்று செய்யவில்லை. அவளின் அறியாப் பருவம் வீண் வில்லங்கத்தில் மாட்டி விடுகிறது. மற்றவரோடு முரண்படுவது ஒன்றும் மகிழ்ச்சியான விடயம் இல்லை. ஏன் உலகத்திலே நான் மிகவும் வெறுப்பது அதைத்தான். மற்றவரோடு முரண்பட்டுத் தற்கம் புரிந்து ஒருவருக்கு ஒருவர் முகத்தை நீட்டிக் கொள்வது , அவமானத்தோடு கூடிய வேதனையைத்தான் தருகிறது. நான் விரும்பாவிட்டாலும் அது என்னைத் தேடி வருகிறது. நான் எப்படித்தான் சண்டை பிடிக்கக்கூடாது , என்ன சோதனை வந்தாலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று எண்ணினாலும் கோபத்தின் ஒரு நிலையில் நான் என்னை இழந்து விடுகிறேன் . அதற்குப் பின்பு என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியாது போய் விடுகிறது. எனது மனத்தை, உணர்ச்சியை , எல்லா நிலையிலும் கட்டுப் படுத்தமுடியாத முடமாகத்தான் நான் இருக்கிறேன். நான் அதை நிவர்த்தி செய்ய வேண்டும். விருப்புக்கள் எல்லாம் நிறைவேறவேண்டும் என்பதுதான் ஒவ்வொரு மனிதனுடைய ஆசையும். அது நிறைவேறுவதுதான் முயற் கொம்பு.

நான் கீழே இறங்கிக் கொண்டு இருக்கும் போதே தனு உள்ளே இருந்து பலமாகக் கதவைத்திறக்க , வினியும் வெளியே இருந்து கதவைத்திறக்க கதவு வேகமாக வினியில் மோதிவிட்டது. நான் ஓடி அங்கு செல்வதற்குள் எல்லாம் நடந்து விட்டது. வினியின் முகத்தில் முதலில் அடிபட்டது. அந்த விசையோடு பின்பு வண்டி ஓடிச் சென்று பக்கத்தில் இருந்த கட்டோடு மோதியது. அவள் வேதனையால் அம்மா அம்மா என வாய்விட்டு அலறினாள்.

எனக்கு வினிபடும் வேதனையைப் பார்க்க மனம் துடித்தது. தனுவை கண்டநிண்டபடி பேசவேண்டும் போல இருந்தது. ஒரு தாய்க்கு அது அழகல்ல என எண்ணியவளாய் வினியை நோக்கி ஓடினேன். தனு போசாது போய் இருக்கலாம். வினிக்கு அப்பால் வெளியே சென்றவன் திரும்பிப்பார்த்து.

ஏய் நொண்டி ! உனக்கு வீட்டில இருக்கேலாதோடி? உனக்கெல்லாம் என்ன உலாத்து வேண்டிக் கிடக்குது இந்த வயசில? என்னடி, வெள்ள பாத்து திரியிறியேடி? இனிமேலைக்கு உன்ன கண்டன் எண்டா மூஞ்சையப் பேத்துப் போடுவன் ? நியாபகம் வைச்சிரு.
எனக்கு கோபம் பொறுக்க முடியவில்லை. எதுவுமே அறியாத வினியிடம் எப்படியான நஞ்சு வார்த்தைகளைக் கொட்டுகிறான். சீ இவனும் ஒரு மனிதனா? நான் கோபத்தை அதற்கு மேல் அடக்க முடியாதவளாய் கத்தினேன்.
தனு வாய அடக்கிப் பேசுங்க . பிள்ளையிட்ட என்ன பேசுறனெண்டு தெரிஞ்சுதான் பேசிறியளே?. (தொடரும்)

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம் யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும். தரமான ஆக்கங்கள்(பேட்டி,கவிதை,சிறுகதை,கட்டுரை),புகைப்படங்கள், மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# POLITIHØGSKOLEN

## i Oslo og Bodø

**Vi ønsker motiverte søkere til grunnutdanningen ved Politihøgskolen.**

Her er de formelle kravene vi stiller til søkerne:

- Norsk statsborger.
- Avtjent førstegangstjenesten (mannlige søkere).
- Generell studiekompetanse. Opptaksnemnda kan likevel godkjenne annen relevant utdanning og/eller yrkeserfaring, som gjør søkeren særlig kvalifisert til politiyrket.
- Ha den nødvendige modenhet og personlig skikkethet for tjeneste i politi- og lensmannsetaten.
- Ha tilfredsstillende fysikk og må herunder gjennomgå og bestå en fysisk test med godkjent resultat.
- Ha god helse og tilfredsstille til en hver tid gjeldende helsekrav (bl.a. normalt fargesyn og synsstyrke uten korreksjon på begge øyne som ikke er dårligere enn 5/10, 6/12, 0,5).
- Plettfri vandel.
- Førerkort klasse B.
- Svømmeferdighet.
- Fylt 20 år det året de tas opp.

Det legges vekt på å sikre en bred rekruttering til Politihøgskolen, slik at politiet så langt som mulig gjenspeiler den norske befolkning, herunder innvandrermiljøer.
Utdanningen er 3-årig, og den er både teoretisk og praktisk. Utdanningen gir 60 vekttall, av disse er 40 vekttall godkjent i universitets- eller høgskolegrad.

Søknadsskjema og brosjyre får du på alle politistasjoner og lensmannskontorer.
Søknadsdokumentene skal leveres samlet på nærmeste politistasjon eller lensmannskontor ved PERSONLIG FRAMMØTE.

**Søknadsfrist 4. desember 1998**

POLITIHØGSKOLEN

POLITIHØGSKOLEN

Grafisk Consult a.s






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

C-BLAD
SARVADESA TAMILER
Etbl.1994
Abonnement:90-kr/år Giro:05320899453
...skblad for informasjon,kunnskap,kultur, fred,framgang og solidaritet! Vol.5 Nr.6

Redaktør:
N.S.Pirabu,B.Sc.,Dip.Jour.U.K
L.Hervigsv.69A
3035 Drammen,Norway

# ...ஸ் சுங்கமாவட்டம்
# ...லிருந்து காடமோவனில்

புதிய பிரதானவிமானநிலையம் திறந்துவைக்கப்பட்டமை காரணமாக ஒஸ்லோ ஆகர்சுஸ் சுங்கமாவட்டம் தன் தொழிற்பாடுகளை போனபுவிலிருந்து காடமோவனுக்கு மாற்றியுள்ளது. புதிய தொலைபேசி இலக்கமும்,விலாசங்களும் பின்வருமாறு:

**முகாமைஅலுவலகம்,சுங்ககட்டிடம்**

அலுவலக,கருமபீடநேரம்:
ஒவ்வொருநாளும் காலை.8.00-மாலை 15.30
(சனிகிழமை,ஞாயிற்றுக்கிழமை பூட்டு)
தொலைபேசி: 64 82 12 12 தொலைநகல்: 64 82 12 13

தபால்விலாசம்: ஒஸ்லோ,ஆகர்சுஸ் சுங்கமாவட்டம்
முகாமைஅலுவலகம்,காடமோவன்
த.பெ.இல.8122 டெப்,0032 ஒஸ்லோ

வருகைமுகவரி:எட்வார்ட் கிறீக் வீதி, ஒஸ்லோ விமானநிலையம்-காடமோவன்

**கட்டுப்பாட்டுஅலுவலகம், முனையககட்டிடம்**

தினசரிகாவல்
விரிவான கருமபீடநேரம்: ஒவ்வொருநாளும் 7.00-8.00 மணி,15.30-17.00மணி
சனிக்கிழமை: 7.00-13.00 மணி
தொலைபேசி: 64 82 12 12 தொலைநகல்: 64 82 10 01

தபால்முகவரி: ஒஸ்லோ,ஆகர்சுஸ் சுங்கமாவட்டம்,கட்டுப்பாட்டு அலுவலகம்-காடமோவன்,த.பெ.இல. 8122 டெப்,0032 ஒஸ்லோ

வருகைமுகவரி:முனையக்கட்டிடம்,ஒஸ்லோ விமானநிலையம்-காடமோவன்

**சுங்க-தீர்வை இயக்குனர்**

அரச தகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ.20-98

## Oslo & Akershus tolldistrikt er på Gardermoen 8. oktober 1998

I forbindelse med åpningen av den nye hovedflyplassen, overfører Oslo & Akershus tolldistrikt sin virksomhet fra Fornebu til Gardermoen. Nye telefonnummer og adresser er:

**Driftskontoret, Tollbygget**
Kontor- og ekspedisjonstid:
hverdager kl. 08.00 – 15.30
(lørdag og søndag stengt)
Telefon: 64 82 12 12
Telefaks: 64 82 12 13
Postadresse: Oslo & Akershus tolldistrikt
Driftskontoret, Gardermoen
Postboks 8122 Dep,
0032 OSLO
Besøksadresse: Edvard Griegs vei,
Oslo Lufthavn Gardermoen

**Kontrollkontoret, Terminalbygningen**
Døgnvakt
Utvidet ekspedisjonstid:
hverdager kl. 07.00 – 08.00 og
kl. 15.30 – 17.00
lørdag kl. 07.00 – 13.00
Telefon: 64 82 12 12
Telefaks: 64 82 10 01
Postadresse: Oslo & Akershus tolldistrikt
Kontrollkontoret, Gardermoen
Postboks 8122 Dep,
0032 OSLO
Besøksadresse: Terminalbygningen,
Oslo Lufthavn Gardermoen

**Toll- og avgiftsdirektoratet**

Innrykket av Statens informasjonstjeneste

A-20/98